பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 11 சனிக்கிழமை (25-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:181

# 18 ஆவது அரசமைப்புத் திருத்த முழு விவரமும் நேற்று அறிவிப்பு
# ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைக்கமுடியாமல் அதிகாரவெட்டு!

கொழும்பு,மே25

அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமுகமாக அரசமைப்புச் சட்டத்துக்குக் கொண்டுவரப்படும் 18 ஆவது திருத்தம் பற்றிய முழு விவரங்களும் நேற்று வெளியிடப்பட்டன.

முக்கியமாக ஜனாதிபதி தாம் விரும்பியபடி நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியாதவாறு அவருடைய அதிகாரம் வெட்டப்படுகிறது. ஒரு வருடத்தின் பின்னர் நாடாளுமன்றைக் கலைப்பதற்கு அவர் ஒன்றில் பிரதமரின் அல்லது நாடாளுமன்றத்தின் சம்மதத்தைப் பெறவேண்டும்.

எம்.பிக்கள் கட்சிமாறி வாக்களிக்கலாம். அதனால் அவர்களின் பதவி பறிபோகாது. ஜனாதிபதி ஆணைக் குழுக்கள் அனைத்தும் ஒழிக்கப்படும்.

மேற்படி தக்வல்களை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்போது வெளியிட்டார்.

கொண்டுவரப்படும் சட்டத்திருத்தங்கள் இரண்டுவகையானவை.

ஒன்று - அரசமைப்பைத் திருத்தும்வகையில் அமைந்த சட்டத்திருத்தங்கள்.

மற்றையவை - அரசமைப்புத் திருத்தம் சம்பந்தப்படாத சாதாரண சட்டத்திருத்தங்கள் என்று பேராசிரியர் பீரிஸ் செய்தியாளர்களுக்கு விளக்கினார்.

அரசமைப்புச் சம்பந்தமான திருத்தச்சட்டங்களை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவை.

மற்றச் சட்டத்திருத்தங்களை சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றலாம்.

அரசமைப்புத் திருத்தங்களில் பின்வருவன அடங்குகின்றன.

1) இருபது நிறைவேற்றுக் குழுக்களை அமைத்தல்.

2) சமூக, பொருளாதார, கலாசார ஆணைக்குழு ஒன்றை அமைத்தல்.

3) நாடாளுமன்றத்தை ஒரு வருடம் முடிந்ததும் ஜனாதிபதி கலைக்க விரும்பினால் அதற்கு பிரதமரின் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பினருடனான சந்திப்பில் தகவல்:

# தடையை நீக்குவதற்கு முன்னர் புலிகளுடன் பேசி ஆகவேண்டும்!

## சில விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது என்கிறார் பிரதமர்

கொழும்பு,மே25

**தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு முன்னர் அவர்களுடன் பேசி சில விடயங்கள் தெளிவுபடுத்தப்படவேண்டியுள்ளது. தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பினரிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.**

நேற்று பிரதமரைச் சந்தித்துப் பேசிய கூட்டமைப்பினர், பேச்சுக்கு முன்பாக புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குமாறு கோரினர். அதற்குப் பதிலளித்தபோதே பிரதமர் இப்படித் தெரிவித்தார்.

பல்வேறு கோரிக்கைகளுடன் தமிழ்க் கூட்டமைப்பினர் நேற்றுக் காலை பிரதமரை அவருடைய அலரி மாளிகை இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், சந்திரநேரு, ரவிராஜ், குமரகுருபரன், விநாயகமூர்த்தி, வெள்ளிமலை கிருஷ்ணபிள்ளை, செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரே பிரதமரைச் சந

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் பேச்சு ஜூன் இறுதியில்தான்!

### உறுதிபடக் கூறுகிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு,மே25

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஜூன் மாத இறுதியில் நடைபெறும். அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற - கிளிநொச்சியில் இடம்பெற்ற - பேசசுக்கள் திருப்தி அளித்துள்ளது.

- இவ்வாறு அரசியல் விவகார கைத்தொழில் முதலீட்டு அபிவிருத்தித் துறைகள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் புர்க்க)

முச்சந்தி முரளி



அப்ப அதிகாரப் போட்டி சூடுபிடிக்கப்போகுது எண்டு சொல்லுங்கோ...

## நாகவிகாரையில் நேற்று புனித கலசம் பிரதிஷ்டை.

### கண்டி தியவதன நிலமே வருகை

யாழ்ப்பாணம்,மே25

பல லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட யாழ். நாகவிகாரைக்கு கலசம் வைக்கும் சம்பிரதாயபூர்வ நிகழ்வு நேற்று பௌத்த சமய கலாசார முறைப்படி நடைபெற்றது

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரத்ன இந்த சமயக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காக நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

விகாரையில் கலசத்தை பிரதிஷ்டை

(12ஆம் பக்கம் பார்க்க)



யாழ். நாகவிகாரையில் கலசம் பிரதிஷ்டை செய்யும் வைபத்தில் கலந்துகொள்வதற்காக வருகைதந்த கண்டி தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்ன, அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன மற்றும் அமைச்சு அதிகாரிகள் ஆகியோர் விகாரைக்கு அழைத்துச்செல்லப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# வன்னிக்குள் எடுத்துவரும் பொருள்கள் மீதான வரி சிலவற்றுக்கு நீக்கம்! ஏனையவற்றுக்கு குறைப்பு!

## அரச அதிகாரிகள் மாநாட்டில் தமிழேந்தி அறிவிப்பு

வவுனியா,மே25

வன்னி மக்களுக்கான வியாபார மொத்த விற்பனை வரி அடுத்த மாதம் முதல் நீக்கப்படுகிறது. வன்னிக்குள் எடுத்துவரப்படும் பொருள்களுக்கான சுங்கத்தீர்வை ஒரு தொகுதிப் பொருள்களுக்கு முற்றாக நீக்கப்படுகிறது; மறுதொகுதி பொருள்களுக்கு வெகுவாகக் குறைக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

அரச அதிபர்கள், உதவி அரச அதிபர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்ட மாநாடு ஒன்று நேறறு கிளிநொச்சியில் நடைபெற்றது.

அந்த மாநாட்டில் நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி உரையாற்றினார். அப்போது மேற்கண்ட விடயங்களை அவர் தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் கூறியதாவது:-


எமது தேசியத் தலைவரின் வழிகாட்டல் தமிழீழத்தை நிச்சயம் வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்லும். நாம் அமைதித் தீர்வையே விரும்புகிறோம். அந்த நம்பிக்கையில்தான் தீர்வை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். அதுவரை நாம் எமது படைபலத்தைக் கட்டிக் காக்கவேண்டும். எமது பலம் காக்கப்படவேண்டும். எமது மண்ணில் நாம் தமிழர்களாக வாழவேண்டும். எமது மரபுவழித் தமிழ் நிலத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்







நாகவிகாரைக்கு கலசம் வைக்கப்பட்ட பின்னர் தியவதன நிலமே ரஞ்சன் விஜேரத்ன, அமைச்சர் ஜயலத். ஜயவர்த்தன ஆகியோர் பிரார்த்தனை செய்வதையும், விகாரையின் தூபியையும், சிங்கள கலாசார வாத்தியக் குழுவினரையும் படங்களில் காணலாம்.







நாகவிகாரைக்கான யானை வாத்தியங்கள் முழங்க அழைத்துவரப்படும் காட்சியையும், நேற்றைய சமயச் சடங்கில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவையும், நிகழ்வில் கலந்துகொண்ட இராணுவத்தினர் மற்றும் பொலீஸாரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:தேவராஜன்)

# யுத்தம் நெருங்கிவிட்டது என்கிறார் அதிபர் முஷாரப்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான போர் நெருங்கிவிட்டதாக பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.



பாகிஸ்தானின் மூத்த பத்திரிகையாளர்களுடன் ஆலோசனை நடத்தியபோதே அதிபர் முஷாரப் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"பாகிஸ்தானிய எல்லையில் இந்திய இராணுவம் போர் ஆயத்த நடவடிக்கையில் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளது. இதனால் எல்லை நிலைவரம் மிகவும் ஆபத்தாக - அச்சமூட்டுவதாக - மாறிவருகிறது. ஆனால் எந்த மிரட்டலையும் சந்திக்க பாகிஸ்தான் இராணுவம் தயாராகவுள்ளது"

என்று அவர் கூறினார்.

இந்தச் சந்திப்பின் போது காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று பத்திரிகையாளர்களிடம் முஷாரப் கேட்டதாகவும் - காஷ்மீர் தீவிரவாதிகளின் ஜிகாத் புனிதப் போருக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்ற கருத்து அப்போது வலியுறுத்தப்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

அங்கு தனது எண்ணம் எதனையும் முஷாரப் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை என்று சந்திப்பில் கலந்துகொண்ட பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

காஷ்மீர் தீவிரவாதிகளை பாகிஸதான் எல்லைக்குள் அனுமதிக்க முடியாது என்று இந்தச் சந்திப்பின் முன்பாக அதிபர் முஷாரப் அறிவித்திருந்தமை, இந்தியாவுடனான பதற்றத்தைத் தணிக்கும் முயற்சி என நம்பப்பட்டது. ஆனால், போர் நெருங்கிவிட்டதாகப் பத்திரிகையாளரிடம் முஷாரப் கூறியிருப்பது முன்னைய நம்பிக்கையை அகற்றிவிட்டதாக இந்தியத் தரப்பில் கூறப்பட்டது.

இதேசமயம், பாகிஸ்தானிய அரசின் செய்தித் தொடர்பாளர் ரஷீத் குரோஷி செய்தியாளர்களிடம் பேசுகையில் -

"இந்திய இராணுவத்தின் பீரங்கித் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பாகிஸ்தானைத் தாக்க நினைப்பது இந்தியாவுக்கு நல்லதல்ல. பாகிஸ்தானின் ஒவ்வோர் அங்குல நிலத்தையும் பாதுகாக்க பாகிஸ்தானிய இராணுவம் தயாராகவே உள்ளது" என்று கூறினார்.

இது ஒருபுறமிருக்க, காஷ்மீரில் எல்லைக்கட்டுப்பாட்டுக் கோட்டின் பூஞ் பகுதியில் பாகிஸ்தானிய இராணுவம் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் ஒரு பெண் உயிரிழந்ததாகவும் -

நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் அப்பகுதியில் பரஸ்பரம் தாக்குதல்கள் நடந்ததாகவும் -

இந்திய வானொலி தெரிவித்தது. ரகூரி மாவட்டத்திலும் இந்திய - பாகிஸ்தானியப் படைகள் பீரங்கிச் சண்டையில் ஈடுபட்டன.

(ஒ-4)

## பாக்.தூதரகத்தை மூடிவிட இந்தியா ஆலோசிக்கிறது!

புதுடில்லி,மே25

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பண உதவி செய்வதாக இந்தியாவுக்கான பாகிஸ்தானியத் தூதரகம் மீது கூறப்படும் குற்றச் சாட்டின் பேரில் அதனை மூடிவிட இந்திய அரசு ஆலோசிப்பதாக இந்திய வெளியுறவுத் துறைத் துணை அமைச்சர் ஒமர் அப்துல்லா கூறியுள்ளார்.

இந்தியாவில் உள்ள பாகிஸ்தானியத் தூதரகம் அலுவலக ரீதியான தபால்கள் எடுத்துச் செல்லப்படும் பைகள் மூலம், பாகிஸ்தானில் இருந்து பணத்தை எடுத்துவந்து, காஷ்மீர்த் தீவிரவாதத் தலைவர்களுக்கு விநியோகிப்பதாக இந்திய அரசுக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

புதுடில்லியில் உள்ள பாகிஸ்தானியத் தூதரகத்தை மூடிவிட்டால் இந்தப் பண விநியோகம் தடைப்படும் என்று நம்புவதாகத் துணை அமைச்சர் மேலும் கூறினார்.

அண்மையில் பாகிஸ்தானியத் தூதரை இந்தியா வெளியேற்றியதையடுத்து ஏற்பட்டுள்ள பதற்றம் தொடரும் நிலையில், தூதரகத்தை மூடும் யோசனையை இந்தியா வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஒ-4)

## பணம் கண்டெடுப்பு!

காரைநகர்,மே25

யாழ். போதனா வைத்தியசாலை வளவினுள் கடந்த 15ஆம் திகதி சிறுதொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு அரியாலை ஶ்ரீபார்வதி வித்தியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அதனை ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் பொ.நடராசா கேட்டுள்ளார்.

தற்போது மேற்படி பாடசாலை யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் இயங்கிவருகின்றது. (ஒ-173)


23 ஆவது பிறந்த தின வாழ்த்து



சுவிஸில் வசிக்கும் திரு.திருமதி மலைக்கேஸ் தம்பதியினரின் ஏகபுத்திரி

செல்வி ஜெனிந்றா

இன்று (25.05.2002) சனிக்கிழமை தனது 23 ஆவது பிறந்தநாளை சுவிஸில் கொண்டாடுகிறார்.

இவரை நாவற்குழியில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா மற்றும் அண்ணன்மார், தம்பிமார் ஆகியோர் சகல சௌபாக்கியங்களையும் பெற்று சீருஞ்சிறப்புடன் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றனர்.

வாழ்க வளமுடன்.

ஐந்துவீட்டுத்திட்டம்,
நாவற்குழிச்சந்தி,
நரவற்குழி.

தகவல்:
மலைக்கேஸ்
(தந்தை)

(C/22289)

ஒன்றுகூடல்

யாழ்.மத்திய கல்லூரியின் எதிர்கால முன்னேற்றம் கருதிய கலந்துரையாடல் ஒன்றிற்கு மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். காலம், நேரம், இடம் என்பன பின்னர் அறிவிக்கப்படும்.

பழைய மாணவர்கள், யாழ்.மத்திய கல்லூரி.
தகவல்-L.விஜயநாதன்.

(4170)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

முழுநிலா நாள் கருத்தரங்கு

| | | |
|---|---|---|
| காலம் | : | நாளை (26-05-2002) ஞாயிற்றுக்கிழமை |
| இடம் | : | கல்லூரி குமாரசுவாமி மண்டபம் |
| தலைமை | : | பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை |
| கருத்துரை | : | "பொ.கைலாசபதி அவர்களின் மெய்யியற் சிந்தனைகள்" |
| வழங்குபவர் | : | திரு.அ.சபாரத்தினம் B.A. |

யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

(C/22287)

ஆதரவு: பாரதி பதிப்பகம் தொலைபேசி:- 3081
ஆப்-செட் பிறின்ரேர்ஸ்.
இல.430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்

## புது நம்பிக்கை துளிர்க்கிறது

"தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்" இவை கிறிஸ்தவ வேத வாக்கியங்கள். சமயத்துக்கு மட்டுமல்லாமல் இன்றைய அரசியலுக்கும் இந்த வாக்கியங்கள் வெகுவாகப் பொருந்துகின்றன.

யுத்தநிறுத்தம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு, நிரந்தர சமாதானம் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுதான் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் கடந்த பெப்ரவரி 22ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்டன.

உடன்படிக்கையில் வரையறை செய்யப்பட்டுள்ள கால எல்லைக்குள் செய்யவேண்டிய முக்கிய காரியங்கள் சிலவற்றை அரசாங்கம் செய்யத் தவறிவிட்டது.

அதனால் உடன்படிக்கை மூலம் எதிர்பார்க்கப்பட்ட பலன் கிடைக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்கள். அவர்கள் பெரும் கவலைக்கு உள்ளானார்கள். தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்.

அவர்கள் சும்மா பார்த்துக்கொண்டு இருப்பார்களா? தட்டினார்கள். கதவில் மட்டுமா இல்லை அரசாங்கத்தின் முதுகிலும்!

புரிந்துணர்வு உடன்படிக்கையை சரிவர நிறைவேற்றுகிறீர்கள் இல்லையே, ஏன்? யுத்தநிறுத்தம், பிரச்சினைக்குத் தீர்வு, நிரந்தர சமாதானம் இவற்றில் இப்போது உங்களுக்கு அக்கறை இல்லையா? அரசினரைப் புலிகள் கேட்டார்கள். அரசினருக்கு மட்டும் கேட்கும் படியாக அல்ல. சர்வதேச சமூகத்தின் காதிலும் விழும்படியாக உரத்த குரலிலும் உறைப்பாகவும் கேட்டார்கள்.

வட இலங்கையிலே வன்னியில் சு.ப.தமிழ்ச்செல்வனும் கிழக்கிலே கரிகாலனும் லண்டனிலே அன்ரன் பாலசிங்கமும் குரல் கொடுத்தார்கள்.

பலன் கிடைத்திருக்கிறது. ஜனாதிபதிக்கு அடுத்தபடியாகப் படைகளுக்குப் பொறுப்பான பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்று முன்தினம் பல முக்கிய அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்.

★ மூன்று பௌத்த விகாரைகள் தவிர ஏனைய வழிபாட்டுத் தலங்களில் இருந்து படையினர் உடனடியாக அகற்றப்படுகிறார்கள்.

★ மீன்பிடித் தடையும் உடனடியாக நீக்கப்படுகிறது. இதுபற்றி அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் வரும்.

★ பல பாடசாலைகளில் இருந்து படையினர் அகற்றப்பட்டு வருகிறார்கள். புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி இன்னும் 160 நாள்களுக்குள் எல்லாப் பாடசாலைகளிலிருந்தும் அனைத்துப் படையினரும் அகற்றப்பட்டுவிடுவார்கள்.

★ எங்கெங்கே, எந்தெந்தப் பொதுக் கட்டடங்களில் படையினர் நிலைகொண்டுள்ளார்கள் என்ற விவரம் கோரப்பட்டிருக்கிறது. விவரம் கிடைத்ததும் அந்தக் கட்டடங்களில் இருந்தும் 160 நாள்களுள் படையினர் அகற்றப்பட்டுவிடுவார்கள். எந்தெந்தக் காலப் பகுதியில் விலக்கப்படுவார்கள் என்ற அட்டவணை முதலில் வெளியிடப்படும்.

இப்படி எல்லாம் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்திருக்கிறார். புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி மூன்று மாதங்கள் பூர்த்தியடைந்த கடந்த புதன்கிழமை அமைச்சர் இவற்றை அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அறிவிப்புக்கள் முன்கூட்டியே வந்திருக்குமானால் சமாதான முயற்சிகளில் அரசாங்கம் சோர்ந்துபோய்விட்டது; தயக்கம் காட்டுகிறது என்றெல்லாம் தமிழ் பேசும் மக்களும் புலிகளும் சந்தேகம் கொள்ளும் நிலைமை ஏற்பட்டிருக்காது; தட்டிக்கேட்கவேண்டிய தேவையும் இருந்திருக்காது.

இரண்டாம் கட்டமாக நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அரசின் சமாதான முயற்சிகளுக்கு மக்கள் அங்கீகாரம் அளித்துவிட்டார்கள். எதிர்ப்பாளர்களை மக்கள் ஒரேயடியாக நிராகரித்துவிட்டார்கள்.

அதனால், அரசாங்கம் ஆரம்பகால அர்ப்பணிப்பு, துணிச்சல் ஆகியவற்றுடன் துரிதகதியில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் என்ற புது நம்பிக்கை இப்போது பலருக்கும் துளிர்க்கிறது. அதை அரசு கருகவிடக்கூடாது.

# 'Z' ஸ்கோர் மதிப்பீட்டுமுறை சட்டபூர்வமானது அல்லவாம்

கொழும்பு,மே25

2001 ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பாக பல்கலைக்கழக மானியக் குழு அறிமுகப்படுத்தியுள்ள 'Z' ஸ்கோர் என்ற புதிய மதிப்பீட்டுமுறை 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைய அறிமுகப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதாவது அந்தச் சட்டத்தின் 18(3)ஆவது சரத்திற்கு அமைய ஆணைக்குழுவால் அறிமுகப்படுத்தப்படும் அனைத்து புதிய ஏற்பாடுகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவேண்டும். மேலும் அந்த புதிய முறையானது வர்த்தமானி வெளியான திகதியில் இருந்தே வலுவுள்ளதாகும்.

இருப்பினும் பல்கலைக்கழக மானியக்குழு இந்த Z ஸ்கோர் முறையை இதுவரை வர்த்தமானியில் பிரசுரிக்கவில்லை. அதன்படி 2001 க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக பல்கலைக்கழக மானியக்குழு புதிதாக அறிமுகப்படுத்திய Z ஸ்கோர் முறையானது சட்டபூர்வமானது அல்ல என்பதே கல்வித்துறை தொடர்பான வல்லுநர்களின் கருத்தாகும்.

அந்த வல்லுநர்கள் தெரிவித்துள்ள கருத்துப்படி மற்றுமொரு பாரிய தவறு நிகழ்ந்துள்ளது. அதாவது பல்கலைக்கழக சட்டத்தின் பகுதி IIIஇன் 19ஆவது சரத்துப்படி இவ்வாறான நடைமுறைகளை மேற்கொள்ளும் அதிகாரம் அமைச்சருக்கு மட்டுமே உள்ளது.

கல்வித்துறைசார் வல்லுநர்களின் கருத்துப்படி சட்டத்தின் 3(5) சரத்துக்கமைய ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக வரையறைகளை மேற்கொளளும் அதிகாரம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி மானியக்குழுவுக்கு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான பொது விதியைத் தீர்மானிக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. இதற்கான அதிகாரம் அமைச்சருக்கு மட்டுமே உள்ளது. அமைச்சர் அவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டாலும் 19ஆவது சரத்துக்கு அமைய அமைச்சர் அந்த விவரங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். (சரத்து 20(1)அ). இருப்பினும் இதுவரை இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த விடயங்கள் அனைத்தையும் அவதானிக்கும்போது Z ஸ்கோர் முறையிலான மாணவர் தெரிவு சட்டபூர்வமானது அல்ல என்பதே வல்லுநர்களின் கருத்தாகும். (க)

## தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்க தலைமையகம் மீண்டும் கைதடியில்!

அரியாலை,மே25

கைதடியில் மீளக்குடியமர்ந்த மக்களின் வசதி கருதி தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையக் காரியாலயம், கிராமிய வங்கி, களஞ்சியம் போன்றவை கைதடிச் சந்திக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றுக்கு இடம்மாற்றப்பட்டிருப்பதாக சங்கத் தலைவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருட காலமாக மேற்படி சங்கம் இடம்பெயர்ந்து இணுவில் ஆஸ்பத்திரி வளாகக் கட்டடம் ஒன்றில் செயற்பட்டு வந்தது.

அத்துடன் மீளக்குடியமராத மக்களின் வசதி கருதி வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, நவாலி, மானிப்பாய், பண்டத்தரிப்பு, சுன்னாகம், திருநெல்வேலி, நீர்வேலி, ஆவரங்கால் போன்ற அதே இடங்களில் சங்கத்தின் கிளைகள் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றன.

அதேசமயம் அராலிக் கிளை மூடப்பட்டு வட்டுக்கோட்டைக் கிளையுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றும் சங்கத் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதேவேளை -

வலிகாமம் பகுதியில் இயங்கிவரும் மேற்படி கிளைகளின் நலன் கருதியும் மக்களின் வசதி கருதியும் சங்கத்தின் அலுவலகப் பணிகள் யாவும் வாரத்தில் திங்கள், வியாழன், ஆகிய நாள்களில் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை முன்பு சங்கத் தலைமைக் காரியாலயம் இயங்கி வந்த இணுவில் ஆஸ்பத்திரி வளாகக் கட்டடப் பகுதியில் செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-17)

### இங்கிருந்து சட்டவிரோதமாக

## இத்தாலி சென்ற 25,000 பேரை திருப்பி அழைப்பதற்கு முடிவு

கொழும்பு,மே25

சட்டவிரோதமாக இத்தாலி சென்று அங்குள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள சுமார் 25 ஆயிரம் இலங்கையர்களை மீண்டும் அழைப்பது என சிறிலங்கா அரசு வாக்குறுதி வழங்கியுள்ளது எனத் தெரியவருகிறது.

இதன்படி இத்தாலியிலுள்ள இலங்கையர்களை மீண்டும் அழைததுவருவதற்கான செலவினை சிறிலங்கா அரசே பொறுப்பேற்கும். அதன் பின்னர் இத்தாலி அரசினால் இந்த இலங்கையர்களுக்கு சட்டபூர்வமான விதத்தில் வேலைகள் தேடிக்கொடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையரை மீண்டும் அழைத்துவர ஏற்படும் செலவினை அவர்களிடமிருந்து அறவிடுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என அமைச்சு அதிகாரி தெரிவித்தார். (க)

### திருநெல்வேலியில் இயங்கும்

## வானியல் அவதானிப்பு நிலையத்தை மாணவர்கள் பார்வையிட முடியும்

யாழ்ப்பாணம்,மே25

பாடசாலை மாணவர்கள் திருநெல்வேலியில் இயங்கும் வானியல் அவதானிப்பு நிலையத்தில் உள்ள கருவிகளைப் பார்வையிடவும் அவற்றின் தொழிற்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளவும் வசதி செய்து தரப்படும்

- இவ்வாறு வானியில் அவதானிப்பு நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வானியல் அவதானிப்பு நிலையத்தைப் பார்வையிட விரும்பும் பாடசாலை மாணவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னர் எமக்கு தெரியப்படுத்தினால் நாம் அதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து கொடுப்போம்.

கடந்த காலங்களில் பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இங்கு கல்விசார் செயற்பாடுகளுக்காக வந்து சென்றனர். மாணவர்களின் ஆர்வத்துக்கு நாம் எப்போதும் முன்னுரிமை வழங்குவோம்.

இங்கு வெப்பமானி, மழைமானி, காற்றுமானி ஆகிய கருவிகளையும் அவற்றின் செயற்பாடுகளையும் நேரில் பார்க்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (க-6)

### நாளை

வைகாசி 12
ஞாயிற்றுக்கிழமை
(26.05.2002)
திதி : பூரணை
மாலை 6.12 வரை.
நட்சத்திரம்: அனுஷம்
பின்னிரவு 3.44 வரை.
பூரணை விரதம்
சுபநேரம் : 8.52 - 10.22
ராகுகாலம்: 4.22 - 5.52
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அமைதி ஆற்றலுக்கு அறிகுறி. பயிற்சியில் பண்பாடு அடைந்து பொறுமையுடன் இருக்கும் மனதில் ஆற்றல் மிக உண்டு.

## கொழும்பு விலையில் இங்கும் விரைவில் பாண் வாங்கலாம்!

யாழ்ப்பாணம்,மே25

கொழும்பு விலையில் விரைவில் யாழ்ப்பாணத்தில் பாண் வாங்கலாம். வன்னியிலிருந்து முகமாலை ஊடாக லொறிகளில் விறகு கொண்டுவரப்படுவதையடுத்து பாண் விலை குறையும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன என்று பேக்கரி உரிமையாளர் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விறகு விலை அதிகரிப்பினால் பாண் உற்பத்திச் செலவு அதிகமெனக் கூறி குடாநாட்டு பேக்கரி உரிமையாளர்கள் 450 கிராம் பாணின் விலையை 14 ரூபாவாக விலை நிர்ணயம் செய்யவேண்டுமென யாழ்.செயலகத்திடம் கோரியிருந்தனர்.

அதன்படி 450 கிராம் பாண் குடாநாட்டில் 14 ரூபாவுக்கே விற்பனையாகி வருகிறது.

கொழும்பில் 450 கிராம் பாணின் விலை 10 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (க-117)

## பல்கலை மாணவர்களுக்கான உதவிப்பணம் வழங்குவதில் தாமதம் காட்டுவது ஏன்?

யாழ்ப்பாணம்,மே25

யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களுக்கான உதவிப்பணம் இதுவரை வழங்கப்படாமை குறித்து மாணவர்கள் மத்தியில் கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவு தொகையாக பல்கலைக்கழகத்தினால் சிறுதொகைப்பணம் மாதாந்தம் வழங்கப்பட்டு வருவது வழமை. எனினும் முதலாமாண்டு மாணவர்களுக்கான உதவு தொகை இதுவரை - அவர்களுக்கான கல்விசார் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் - இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இம்முறை சில மாதங்களுக்கு முன்னதாகவே 'மகாபொல புலமைப் பரிசில்' பெறும் மாணவர்களின் விவரப்பட்டியல் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளபோதும் உதவுதொகை வழங்குவதில் ஏன் தாமதம் ஏற்படுத்தப்படுகிறது என்று மாணவர் தரப்பு விசனிக்கிறது.

இது தொடர்பாக யாழ்.பல்கலை வட்டாரங்களுடன் தொடர்பு கொணடு கேட்டபோது மாணவர் உதவிப்பணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

எதிர்வரும் ஜூன் மாதம் 10ஆம் திகதியளவில் உதவிப்பணம் பெறத் தகுதியான ஒருதொகுதி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்படும் என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டது. (க-9)

## சாவகச்சேரி மருத்துவமனையை தரம் உயர்த்த அங்கீகாரம்

தென்மராட்சி,மே25

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையை போதனா ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்த சுகாதார அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்துள்ள இவ்வைத்தியசாலைக் கட்டடங்கள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டு, போதனா ஆதார வைத்தியசாலை தரத்திற்கு கட்டடங்கள் அமைக்கவும் சுகாதார அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இக்கட்டடங்கள் ஜப்பான் அரசின் உதவியுடன் அமைக்கப்படவுள்ளதாகவும் -

அவற்றை அமைப்பதற்குரிய தள மதிப்பீடுகளை கொழும்பிலிருந்து வந்த பொறியியலாளர் குழு ஒன்று அண்மையில் எடுத்துச்சென்றுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றி இடம்பெயர்வின் பின்னர் ஏனைய சுகாதார நிறுவனங்களில் தற்காலிகமாக இணைக்கப்பட்ட ஊழியர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ளபோதிலும் தற்போது கடமையாற்றும் இடங்களில் இருந்து விடுவிக்கப்படவில்லை என்றும்-

சாவகச்சேரி ஆஸ்பத்தரி மீள இயங்க ஆரம்பித்துள்ள இந்த நிலையில் இந்த ஊழியர்கள் சொந்த இடததில் கடமையாற்ற விரைவில் அனுமதிக்கப்படவேண்டும் என்றும் - ஊழியர் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-117)

# "ஆத்மஜோதி" சிலை திறப்புவிழா மலர் - 25.05.2002

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

திரு.ஆத்மஜோதி முத்தையா அவர்கள் தானும் வாழ்ந்து மற்றையோரையும் வாழ வழிவகுத்த உத்தமர். அவரது பணிகள் புவியுள்ளோர் அனைவரையும் சிந்திக்க வைத்தன. அவர் சைவாசாரம் மிக்கவர்; சிறந்த கல்விமான்.

இவரது சிந்தனைகள் இலங்கையில் மாத்திரமன்றிக் கடல் கடந்த நாடுகளிலும் பரவியுள்ளன. இவரின் பணிகளை நினைவூட்டும் வகையில் இவரது உருவச்சிலையும் தியான மண்டபமும் அமைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இப்பெரியாரின் நினைவு நிலைத்து நிற்க இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஸ்ரீலஸ்ரீ **சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
*நல்லை ஆதீன முதல்வர்*

## ஆத்மஜோதியின் ஆன்மீகப் பணி மகத்தானது!

அமரர் ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் பிறந்த ஏழாலையில் "ஆத்மஜோதி தியான மண்டபம்" அமைத்திருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

ஆத்மஜோதி அவர்கள் சொந்த நாட்டில் மட்டுமன்றித் தமிழகம் உள்ளிட்ட தென்கிழக்காசியா மற்றும் மேலைத்தேய நாடுகளிலுமுள்ள மக்களால் நன்கு மதிக்கப்பெற்ற பேரறிஞராவார்.

மலையகத்திலே குறிப்பாக நாவலப்பிட்டியிலிருந்து ஆரம்பித்த அவரது ஆன்மீகப் பணிகள் சமூகத்திலிருக்கும் பல படித்தரப்பினருக்கும் பயன்படு வதாயிற்று.

அவரின் பெயரில் மண்டபம் அமைத்த பெரியார்களை வாழ்த்துவதோடு அவர்களுக்கு இறையருள் கிட்டவேண்டும் என்றும் பிரார்த்திக்கிறேன்.

**சாந்தி திருநாவுக்கரசன்** (பணிப்பாளர்)
*இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு-04.*

## நிகரற்ற சமூகத் தொண்டன்

திரு. நா. முத்தையா ஆசிரியர் ஈழத்தின் தலைசிறந்த ஓர் ஆத்மீகவாதி. சமயப் பணியுடன் சமூகத் தொண்டும் செய்தவர். தன்னலமற்ற பணியினால் இந்துசமயப் பேரவையின் ஆரம்ப காலத் தலைமைப் பதவியும் தேடிவந்தது.

இவரது நினைவாக ஏழாலை இலந்தகட்டி ஞான வைரவர் ஆலய வளாகத்தில் ஒரு தியான மண்டபமும் ஆத்மஜோதியின் உருவச் சிலை நிறுவுவதும் போற்றுதற்குரியனவாகும்.

**சி.சக்திகிரீவன்.**
*கௌரவ செயலாளர், இந்துசமயப் பேரவை.*

## இறை தொண்டு வாழ்க!

அன்பர்கள் பலரின் வேண்டுகோளுக்கு இணங்கி அமரர் 'ஆத்ம ஜோதி' முத்தையா அவர்கள் நினைவாகத் தியான மண்டபமும் பெரியாரின் உருவச் சிலையும் நிறுவுவதற்குப் பல வகையிலும் உழைத்த நா.முருகையா அவர்கள் பாராட்டுக்குரியவர்.

அமரர் 'ஆத்மஜோதி' நா.முத்தையா அவர்கள் பிறந்த மண்ணிலே அவர் பிறந்த நாளில் திறப்புவிழா நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

மு.பாலசுப்பிரமணியம்,
*அத்தியடிப் பிள்ளையார் தேவஸ்தானம், ஏழாலை.*



## செல்வ சபையாக வாழி! வாழி!!

அன்புருவன் அருளுடையோன் சிவப் பேறுற்ற
ஆத்மஜோதி முத்தையா என்னும் வள்ளல்
முன்பரவிச் சைவமக்கள் தோத் தரிக்கும்
முனிவனெனப் பாராட்டும் அன்னார் பேரில்
பொன் பொலியும் ஏழாலைப் புனித ஊரில்
பொலிந்தோங்கும் தியான மணி மண்டபத்தை
இன்பமிக அமைத்த தவச்சீலர் வாழி!
இறை யொளியைத் தருமண்டபச் சீர் வாழி!!

கவியோகி
அளவையூர் அருட்கவி **சீ.விநாசித்தம்பிப் புலவர்.**

## சமூக சேவைக்கு முன்னின்றுழைத்தவர்

சில ஆண்டுகளுக்கு முன் ஆத்மஜோதி என்ற மாதப் பத்திரிகை வாயிலாகச் சமய உண்மைகளை மக்களிடையே பரப்பியவர் அமரர் நா.முத்தையா அவர்கள். சமய, சமூகப் பணிகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு சஞ்சிகை வெளியிட்டதால் அதன் ஆசிரியரையே 'ஆத்மஜோதி' என மக்கள் அழைக்கலாயினர்.

இறை அன்புமிக்க இவர் வழிபட்டு வந்த ஆலயச் சூழலில் தியான மண்டபம் அமைத்து, இவரது உருவச் சிலையும் நிறுவுவது மகிழ்ச்சி தருவதாகும். இந்நன்முயற்சியில் முன்னின்றுழைத்த அனைவரும் இறை ஆசிக்கு உரித்தாகப் பிரார்த்திக்கிறேன்.

**- சுவாமி ஆத்மகணானந்தா**
*இராமகிருஷ்ண மடம், கொழும்பு - 06.*

## அறம் வளர்த்த ஆன்மீகப் பெரியவர்

சைவசமய மரபை வளர்ப்பதற்காகத் தமது வாழ்நாளில் அறப் பணியாற்றிய பெரியார் ஆத்மஜோதி ஐயா ஆவார். இந்த ஆன்மீகத் தலைவரை நினைவுகூர்ந்து இவரின் பெயரில் தியான மண்டபமும் இவரது உருவச் சிலையும் நிறுவி விழா எடுத்தல் நன்றிக்குரிய விடயங்களாகும்.

அத்துடன் இவரது பதிப்புப் பணி தொடர 'ஆத்மஜோதி' என்ற ஆத்மீக மலர் வெளிவர ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்வதும் நன்றெனக் கூறி அமைகின்றேன்.

செஞ்சொற் செல்வர் **ஆறு.திருமுருகன்.**

## நன்றி நவில்கின்றோம்

ஆத்மீக வள்ளல் 'ஆத்மஜோதி' முத்தையா அவர்கள் சமயத் தொண்டுக்காக வெளிநாடு சென்றிருந்தபொழுது இயற்கை எய்தியமை அனைவரும் அறிந்ததே. சமயப் பணியுடன் சமூகத் தொண்டும் ஆற்றிய அப்பெரியவரைச் சமகாலத் தலைமுறையினர்முதல் எதிர்காலத் தலைமுறையினரும் நினைவுகூரும் முகமாக நினைவாலயம் ஒன்று வேண்டுமென்ற ஆவலை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஆலோசனைகளும் பண உதவியும் நல்கியமையாலேயே 'ஆத்மஜோதி' தியான மண்டபமும், உருவச் சிலையும் இன்று திறந்து வைக் கக்கூடியதாய் இருந்தன.

இதற்கான ஒத்துழைப்பைத் தந்துதவிய அனைவருக்கும் உளங்கலந்த நன்றி உரித்தாகுக.

**நா.முருகையா**
*பொருளாளர், மண்டப அமைப்புக் குழு.*

(4081)

| விழாச் சிறப்புற வாழ்த்துவோர்: | | |
|---|---|---|
| **சிவன் மாளிகை** கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | **சிந்துகா பேக்கரி** ஏழாலை தெற்கு, ஏழாலை. | **செல்வன் கூல்பார்** கண்டி வீதி, சாவகச்சேரி. |
| **வாணி ரெக்ஸ்** இல.81, பெரியகடை, யாழ்ப்பாணம். | **சிவகுரு பல்பொருள் வாணிபம்** ஏழாலை மத்தி, ஏழாலை. | **நிலோ தொலைத் தொடர்பு நிலையம்** (இரவு - பகல் சேவை) ஏழாலை தெற்கு, சுன்னாகம். |


மணவாழ்வில் இணைந்த மகிழ்ச்சியில்
இன்று வெள்ளிவிழாக் காணும்
தம்பதியினருக்கு

# பாராட்டு



**திரு.மு.ஜெகநாதன் அவர்களும்**
**மனையாள் திருமதி தேம்பாமலரும்**

25.05.1977இல் இல்லறவாழ்வில் இணைந்து 25 ஆண்டுப் பூர்த்தியான இன்று (25.05.2002) சனிக்கிழமை வெள்ளிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் வேளையில் தம்பதிகள் தொடர்ந்தும் சகல சௌபாக்கியங்களுடன் மேலும் பல்லாண்டுகாலம் நலமாக வாழ இறையருளை வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்,
பிள்ளைகள்: செல்வி ஜெ.சிறாந்தினி, செல்வன் ஜெ.உமேஷ்காந்,
செல்வி ஜெ.வத்சாயினி, செல்வன் ஜெ.விஜயகாந்,
உறவினர்கள், நண்பர்கள்.

*"துளசி மாடம்"*
*உடுப்பிட்டி.*

(4093)


## பனங்கள்ளுக்கு திடீர் மவுசு!

அராலி,மே25

நாட்டில் இன்று நிலவும் சமாதான சூழ்நிலையில் தென்னிலங்கையில் இருந்து இங்கு படையெடுத்து வரும் மக்கள் பனங்கள்ளு விற்கும் இடங்களைத் தேடிச் செல்கின்றனர். இதனால் இங்கே பனங்கள்ளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் பெரும்பாலும் மேலைநாட்டுக் குடிவகைளையும், சாராயம் போன்றவற்றையுமே அருந்தி பழக்கமடைந்த மக்கள் இங்கே கள்ளுக்கு அலைந்து திரிவதைக் காணக் கூடியதாக உள்ளது. (க-13-ரி)

## 'யேசு பாதங்களில்' ஒலிநாடா வெளியீடு

யாழ்ப்பாணம்,மே25

யாழ்.அமல மரித் தியாகிகள் சபையின் டி.மசனட் இறையியல் குழுமத்தின் 'யேசு பாதங்களில்' என்னும் ஒலிநாடா இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.மறைக் கல்வி நடுநிலையத்தில் வெளியிடப் படவுள்ளது.

அருட்திரு.ஜெறோம் லம்பேட் (அ.ம.தி) தலைமையில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபரும் இளவாலை மறைக்கோட்ட முதல்வருமாகிய அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் முதன்மை விருந்தினராகவும், அமலமரித் தியாகிகள் சபையின் யாழ்.மாகாண முதல்வர் அருட் திரு.ஜீவேந்திரா போல் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

ஆய்வுரையை கிளரீசியன் சபையைச் சேர்ந்த அருட்திரு.றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன் நிகழ்த்துவார்.

(க-8)


# கடைக் கட்டடம் விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள,
12 1/2அடிX156அடி விஸ்தீரணமுள்ள கடை
விற்பனைக்கு உண்டு.

பின்புறத்தில் 10 அடி அகலமுள்ள பாதை உண்டு.
சொந்தக்கடை, உடனடிக் குடிபுக உகந்தது.

தொடர்பு:
23, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(4090)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 1928 - 03 - 14



இறப்பு 2002 - 04 - 25

**திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**
*(இளைப்பாறிய ஆசிரியை - உசன் இராமநாதன் ம.வி.)*

25.04.2002இல் அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு ஆறுதல்கூறி உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், அனுதாபச் செய்தி அனுப்பியோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*செட்டியார்மடம்,*
*அராலி வடக்கு. வட்டுக்கோட்டை.*

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(4107)

## போக்குவரத்துச் சபை பணிகளுக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே25

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் விண்ணப்பங்கள் கோரப்பட்ட சாரதி மற்றும் நடத்துநர் மற்றம் திருத்துநர் (மெக்கானிக்) ஆகிய பணிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு இதுவரை அழைக்கப் படாதவர்களில் அடிப்படைத் தகுதிகள் இருப்பவர்கள், விண்ணப்பத்தை அனுப்பிய பதிவுத்தபால் பற்றுச் சீட்டுடனும், விண்ணப்பத்தின் பிரதியுடனும் கோண்டாவிலில் உள்ள வட பிராந்திய போக்குவரத்துச் சபை அலுவலகத்தில் பதிவுசெய்யுமாறு சபையின் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

அவ்வாறு பதிவு செய்தோர் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8மணிக்கு அலுவலகத்துக்கு சமுகம் தருமாறும் -

அந்தச் சமயத்தில் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், பாடசாலை விடுகைப்பத்திரம், தேசிய அடையாள அட்டை, கிராம அலுவலரின் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களையும் எடுத்துவருமாறும் -

பொது முகாமையாளர் கேட்டுள்ளார். (ஒ-10)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே25

யாழ்மாவட்டத்தில் வேலை வாய்ப்பின்றியிருக்கும் வணிக முகாமைத்துவ உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய வணிக டிப்ளோமா பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் யாழ்.பல்கலைக் கழக கேட்போர் கூடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். இக்கலந்துரையாடலில் மேற்குறிப்பிட்ட பட்டதாரிகளை கலந்துகொள்ளுமாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (ஒ-13)

## விஞ்ஞானபாட ஆசிரியருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே25

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கை விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் ஏற்பாடுசெய்துள்ளது. (ஒ-10)

## 'தில்லையம்பதியாள்' ஒலிநாடா வெளியீடு

கோண்டாவில் அருள்மிகு தில்லையம்பதி சிவகாமி அம்பாள் திருக்கோயிலின் பெருமை கூறும் 'தில்லையம்பதியாள் கீர்த்தனை - பாகம் III' ஒலிநாடா வெளியீட்டு விழா ஆலயப் பரிபாலன சபைத் தலைவர் சி.ஆனந்தராஜா தலைமையில் இன்று நண்பகல் 12மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறுகிறது. உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இந்நிகழ்வில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் மதிப்புரையையும் நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராசா வாழ்த்துரையையும் வழங்க ந.வீரமணி ஐயர் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டும் வைப்பார். (ஒ-13)

## இலங்கை வங்கியின் விசேட கருமபீடம்

இலங்கை வங்கி மானிப்பாய் கிளையின் விசேட கருமபீடம் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய சுற்றாடலில் அமைக்கப்பட்டுள்ளது. நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இக்கருமபீடம் இன்றும் நாளையும் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-13)

## மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் காலை இழந்தார்!

அல்லாரை தம்புதோட்டப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை மிதிவெடியில் சிக்கி காலை இழந்த குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காணித் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த ஆ.கந்தசாமி என்பவரே இவ்வாறு காலை இழந்தவராவார். இப்பகுதியில் ஆட்லறித்தளம் அமைக்கப்பட்டிருந்ததும் தற்போது அத்தளம் அகற்றப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க-13-ரி)


யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்
உடுப்பிட்டி
நூற்றாண்டு நிறைவு மண்டபம்
திறப்பு விழா

காலம் : நாளை (26.05.2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2மணி
தலைவர் : திரு. இ.இராகவன்

நிகழ்வுகள்

- வரவேற்பு ஊர்வலம்
- வழிபாடு
- பாடசாலைப் பெயர் வளைவு திரைநீக்கம்
  உயர்திரு. சி.சிவராசா
  (மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
- நூற்றாண்டு நிறைவு மண்டபம் திறந்து வைத்தல்
  உயர்திரு. வே.தி.செல்வரட்ணம்
  (வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்)

(4153) - பாடசாலைச் சமூகம்.



மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி
(மட்டுவில் ஞானவயிரவர் கட்டட நிதிக்காக)

இடம் : ஆவரங்கால் மைதானம்
காலம் : நாளை (26.05.2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2மணி

செயலாளர்,
மாட்டுவண்டிச் சவாரிச் சங்கம்
(4145)



காரைநகர் ... ஸ்ரீ முத்துமாரி அம்மன்
தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்

இன்று (25-05-2002) சனிக்கிழமை ... 6.00 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தேர்ப்பவனி நடைபெறுவதுடன் அன்றைய தினம் விசேட நிகழ்ச்சியாக
தவில் : திருச்சி முருகன் (இந்தியா)
N.R.S.சுதாகரன் குழுவினர்
N.K. ... குழுவினர் ஆகியோரின் நாதஸ்வர,தவில் கச்சேரி இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

காரைநகர் (4151) 9...ம் திருவிழா உபயகாரர்கள்



BATA REQUIRES SALES REPRESENTATIVES

BATA Dealer Service Centre in Jaffna requires Sales/Marketing Representatives to market their products in Jaffna Peninsula. Two years experience in sales and marketing. Age between 22 to 35 years. Qualification in marketing will be an added advantage.

Apply immediately to

BATA Dealer Service Centre.
Advt.No.1526
C/o Uthayan, Jaffna.
(C/22280)



# Canadian College of Business & Computers.

Offers
$4 Million
in Scholarships
to study in Canada



The Canadian College of Business & Computers is investing over 4 Million Dollars to build the foundation of human development and PEACE. CCBC has decided to offer Scholarships to Sri Lankan students because we are convinced that they will contribute, in the near future, to strengthen Canada's growing influence in Sri-Lanka. CCBC is pleased to expose young Sri Lankans to a peaceful nation like Canada.
This program is targeted towards all Sri Lankans who have demonstrated plans for higher education. You will undergo a 2 Hour aptitude test followed by an extensive interview conducted by CCBC principals at the BMICH
To be eligible for Scholarship and Admission you will have to score 75% and 60% respectively.
Scholarships will be awarded based on aptitude score, previous academic achievement and evidence of social and community participation.

**Aptitude Test**
Date: June 1st and 3rd
Time: 10:00 am to 4:00 pm

**Interview**
Date: June 4th,5th and 6th
Time: 10:00 am to 4:00 pm

**Scholarships will be awarded as follows:**

5 Awards of Full Tuition CDN $ 19,000 each.
10 Awards of Partial Tuition CDN $ 17,000 each.
10 Awards of Partial Tuition CDN $ 13,000 each.
80 Awards of Partial Tuition CDN $ 11,000 each.
155 Awards of Partial Tuition CDN $ 9,000 each.
200 Awards of Partial Tuition CDN $ 7,000 each.

The deadline for receipt of completed applications is May 31st, 2002. Please ensure you submit the following documents along with your application to the following address

Scholarship Application & Admission
24 Temple Lane
Colombo 3
Sri Lanka
phone: 507.176

WWW.CCBC.CA

eSTUDIES

**Scholarship Application Requirements:**

1. School Character Certificate
2. Police Clearance Report
3. Copy of your Passport
4. Copy of your Birth Certificate
5. Copy of your Educational Certificates/Transcripts
6. Employment Letter, if any
7. Proof of sufficient funds for living expenses for two years - ( US $ 10,000) and tuition payment ranging from US $ 1,500 to US $ 8,000 depending on the scholarship award you would receive.
8. Fee of US $13 by Demand Draft in favor of "Canadian College of Business & Computers"

Ready for the challenge? Welcome to Canada for your studies.

Contact Persons: Meena or Violeta
INTERNATIONAL ADMISSIONS OFFICE
phone: 1•416•413•1234
fax: 1•416•413•0314
e-mail: admin@ccbc.ca
Call During 8:00pm - 5:00am Sri Lanka Time

"Education is the foundation of Human Development, Security and PEACE"

## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 13 – 11 – 1981

காலனவன் பிடியில் 04 – 06 – 2001

### அமரர் கந்தப்பு இராகுலன்

(யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவன் A/L 2001 Com.)

*பாசத்தின் கலங்கரை விளக்கே – எம் இனிய ராகுலா...*
*எம்மை நீ மகிழ்விக்க என்று பாரிடையே பிறந்தாயோ*
*பாதியிலே பரிதவிக்க விட்டுச் சென்றாயே*
*அம்மாவை இறுதிவரை பார்ப்பாய் – என்று சொன்னாயே – அன்று*
*புத்திசாலியான உன் மூளை எங்கே போனதடா*
*பெற்றவர்களின் புலம்பல் – உன்*
*காதில் விழவில்லையா?*
*விடை கூறு ராகுல... ராகுல...*

*சாமியன் அரசடி,*
*கரவெட்டி.* (4073)

என்றும் உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு,மே25

ஜனாதிபதி நிதியத்துக்கு ஆதாரமாகவுள்ள அபிவிருத்தி லொத்தரை தனியார் மயமாக்குவதற்கு அரசு முயற்சி எடுத்துவருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இந்த முயற்சியானது ஜனாதிபதி நிதியத்துக்குக் கிடைக்கும் வருமானத்தைத் தடுத்து நிறுத்திவிடும் எனவும் - அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இல்லத்தில் 182 நோயாளிகளுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பக அரசுக்கு எடுத்துக்கூறி அதனைத் தடுத்து நிறுத்தப்போவதாகவும் அவர் மேலும் அங்கு தெரிவித்துள்ளார்.

முன்னாள்ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் 1978ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த நிதியம் தனதுகாலத்தில் நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

(ஓ-10)

## JAFFNA MEDICAL ASSOCIATION

**POSTPONEMENT OF AGM**

The AGM planed to be held on 25th May 2002 is postponed to 15th June 2002 at 11.00 a.m., in the clinical Lecture hall, Teaching Hospital Jaffna.

Dr.M.S.Mugunthan
*Hony secreatary.*

(C/22271)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய
தர்மகர்த்தா சபை உறுப்பினரும்
பதிவு வைத்திய அதிகாரியுமாகிய

### Dr.தம்பிஐயா அருமைத்துரை

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல புவனேஸ்வரி அம்பாளின் பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*சுதுமலை.* (4087)

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய
தர்மகர்த்தா சபையினர்.

## திருமண வாழ்த்து

ஓம் சிவமயம்

நிகழும் சர்வமங்களகரமான சித்திரபானு வருடம் வைகாசித் திங்கள் 11ஆம் நாள் இன்று(25.05.2002) சனிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் 13.30 மணிவரையுள்ள விசாக நட்சத்திரமும் சதுர்த்தசி திதியும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

நாகதம்பிரான் றோட், பலாலி
**திரு.திருமதி முத்துத்தம்பி தம்பதிகளின்**
புத்திரன் திருநிறைசெல்வன்
**தங்கராஜா (ராஜா)**
அவர்களுக்கும்

கைதடி கிழக்கு, கைதடி
**திரு.திருமதி சிவபாதம் தம்பதிகளின்**
மூத்த புத்திரி திருநிறைசெல்வி
**குமுதினி (பபி)**
அவர்களுக்கும்

சுவிஸ் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் திருமாங்கல்யம் நடைபெறுகிறது. மணமக்களை நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

திரு.திருமதி முத்துத்தம்பி
திரு.திருமதி மயூரன்
திரு.திருமதி கருணாகரன் (ஜேர்மனி)
(மணமகன் குடும்பம்)

திரு.திருமதி சிவபாதம்
திரு.க.சசிகுமார்
செல்வி குகந்தினி சிவபாதம்
திரு.சி.குகன் (லண்டன்)
(மணமகள் குடும்பம்)

(4072)

## முதலாம் வருட நினைவலைகள்



அன்னை மடியில் 17 - 05 - 1939

ஆண்டவன் அடியில் 25 - 05 - 2001

### அந்தோனிப்பிள்ளை எட்வேட் இராஜேந்திரம் (துரை)

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர், I.C.R.C உத்தியோகத்தர்)

திதி: 25.05.2002

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் - அப்பா
ஆறவில்லை எம் துயரம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் கடவுளை
வேண்டுகின்றோம்.

*41/2, ஈச்சமோட்டை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (4085)

என்றும் தங்கள் நினைவுடன்:
மனைவி, மகள், மகன்மார்,
மருமகன், தாய், சகோதரர்கள்.


## யூனியன் அஷ்யூரன்ஸ்

நட்புடன் கூடிய செயல்திறன் மிக்க
ஆயுள் காப்புறுதி
பொதுக் காப்புறுதி சேவைகள்
இதுவே

**யூனியன் அஷ்யூரன்ஸ்**

கண்ணை இமைகாப்பது போல் காத்திடுவோம்

**UNION ASSURANCE Ltd.**

139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P:-3753

*We will take care of you for life*

(C/22175)

# அடிக்கடி கொழும்புக்கு வரும் அமெரிக்க யுத்தக் கப்பல்கள்!

**பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு உதவுவது என்ற போர்வையில் அமெரிக்கா தற்போது இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அக்கறை கொண்டுள்ளது. அமெரிக்காவின் உள்நோக்கம் குறிப்பாக திருகோணமலையிலுள்ள எரிபொருள் குதங்கள் மீதே இருக்கலாம் என்பது அந்நாட்டு யுத்தக் கப்பல்களின் விஜயங்களில் இருந்து ஊகிக்க முடிகிறது. இது பற்றி பாலித அமரசூரியா என்பவரால் எழுதப்பட்டு 19.05.2002 திகதிய "லக்பிம" சிங்கள வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

கடந்த 11ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்திற்கு என்றுமில்லாத வகையில் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. யு.எஸ்.எஸ்.சைட்ஸ் (U.S.S. SIDES) என்ற அமெரிக்க யுதத்தக்கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தருவதை முன்னிட்டே பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அந்தக் கப்பலில் ஏவுகணைகள் பொருத்தப்பட்டிருந்தன். நீர்மூழ்கிகளை அழிக்கும் வெடிப் பொருள்கள் இருந்தன. ஹெலிகொப்டர்கள் தரையிறங்கக்கூடிய தளம் அமைக்கப்பட்டிருந்தது. மிகவும் நவீனமானதும் ஆற்றல்மிகு ஆயுதங்களைக் கொண்டதுமான இந்தப் பாரிய யுத்தக் கப்பல் கடந்த 14ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும்வரை பாதுகாப்புக் கெடுபிடிகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

கொழும்புத் துறைமுகத்தில் இலங்கைக் கடற்படையினர் அனுமதி பெற்று நாளாந்தம் அங்கு செல்வோரைக்கூடத் துருவித்துருவி சோதனையிட்டனர்.

இத்தகைய அமெரிக்க யுத்தக் கப்பல்கள் அடுத்தடுத்து கொழும்புத் துறைமுகத்திற்கு வந்துள்ளது இரண்டாவது தடவையாகும். ஏப்ரல் 30ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்திற்கு மற்றொரு அமெரிக்க யுத்தக் கப்பலான யு.எஸ்.எஸ். ஹொப்பர் (U.S. S. HOPPER) வந்தது.

ஏப்ரல் 30ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்திற்கு வந்த 'யு.எஸ். எஸ். ஹொப்பர்' கப்பலை விட யு.எஸ்.எஸ். சைட்ஸ் கப்பல் உருவத்தில் மாத்திரம் வேறுபட்டிருக்கவில்லை. அந்த இரு கப்பல்களின் வருகையின் நோக்கங்களிலும் வேறுபாடுகள் இருந்தன.



அமெரிக்க யுத்தக் கப்பலான 'யு.எஸ்.எஸ்.சைட்ஸ்'

யு.எஸ்.எஸ். ஹொப்பர் கப்பல் எரிபொருள் நிரப்புவதற்காக கொழும்புத் துறைமுகத்தில் 10 மணித்தியாலங்கள் தரித்துநின்றது. ஆனால் 'யு.எஸ்.எஸ். சைட்ஸ்' கப்பல் நானகு நாள்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்துநின்றது. எரிபொருள் நிரப்புவதற்கும் ஏனைய தேவைகளுக்குமாக அந்தக் கப்பல் நான்கு நாள்கள் தரித்து நிற்கவில்லை.

"இந்தப் பயணத்தினால் கொழும்பைப் பற்றியும் ஸ்ரீலங்காவைப் பற்றியும் எங்களால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு உதவுவதே எமது நோக்கமாகும். இதுவே எமது பயணத்தின் நோக்கம்" எனத் தெரிவித்தார் கப்பலின் கட்டளை அதிகாரியான ஒக்டாவியோ ஈ - மன்டியூலி.

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு உதவவந்த 'யு.எஸ்.எஸ்.சைட்ஸ்' கப்பல் 07.08.1978 அன்று வெள்ளோட்டம் விடப்பட்டது. அமெரிக்க கடற்படையில் ஏவுகணைகளை அறிமுகப்படுத்திய அட்மிரல் ஜோன்.எச்.சைட்ஸ் என்பவரின் பெயரே இந்தக் கப்பலுக்குச் சூட்டப்பட்டுள்ளது.

கடலில் இருந்து எதிரியின் கப்பல்கள் மீதும் வான் கலன்கள் மீதும் நீர்மூழ்கிகள மீதும் ஏவுகணைகளைச் செலுத்தக்கூடிய ஆற்றலை இந்தக் கப்பல் கொண்டுள்ளது. இதற்காக இந்தக் கப்பலில் பொருத்தப்பட்டுள்ள தொழில்நுட்ப உபகரணங்களின் நிறை 4 ஆயிரத்து நூறு தொன்களாகும்.

ஏவுகணை செலுத்தப்படுவதை அவதானிக்க கப்பலின் மேற்றளத்திற்குச் செல்ல வேண்டும். சாதாரண ஏவுகண்ணைகளையும் 'ஹாபூன்' (HARPOON) ஏவுகணைகளையும் இந்தக் கப்பலில் பொருத்தப்பட்ட ஏவுகணைச் செலுத்தியின் மூலம் செலுத்த முடியும். 150 மைல்களுக்கு (240 கி.மீ) அப்பாலுள்ள எதிரியின் கப்பலை ஏவுகணை மூலம் தாக்கி அழிக்க முடியும்.

கொழும்புத் துறைமுகத்தில் இந்தக் கப்பல் தரித்து நிற்கிறது என வைத்துக்கொள்ளுவோம். காலித் துறைமுகத்தில் தரித்து நிற்கும் எதிரியின் கப்பலை ஏவுகணை மூலம் தாக்கி அழிக்க முடியும்.

## நோக்கம் எதுவாக இருக்கும்?

நானூற்று ஐந்து அடி நீளத்தையும் 45 அடி அகலத்தையும் கொண்ட இந்தக் கப்பலின் மேற்றளத்தில் இரண்டு அல்லது மூன்று ஹெலிகளை நிறுத்த முடியும். துறைமுகத்தில் இந்தக் கப்பல் தரித்துநிற்கும் போது இதில் இருந்து புறப்படும் ஹெலியினால் ஒரு நாட்டின் உட்பகுதியிலோ அல்லது கடலில் ஒரு குறித்த இலக்கிலோ தாக்குதலை மேற்கொள்ளமுடியும்.

ஹெலிகள் பயணம் செய்யும் போது அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்பாட்டு அறை கப்பலின் 2ஆம் தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கப்பல் தரித்துநிற்கும் இடங்களின் சுற்றாடலில் இடம்பெறும் அனைத்து விடயங்களையும் அறியும் விதத்தில் கப்பலின் 2ஆம் தளத்திலுள்ள அறைகளில் உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. பல ரேடார் திரைகள் பொருத்தப்பட்டுள்ள ரேடார் அறையில் பணிபுரியும் ஊழியர்களின் கண்களில் இருந்து சுற்றாடலில் பயணம் செய்யும் எந்தக் கலமும் தப்பமுடியாது.

இந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தரித்துநின்றவேளையில் புந்தன கடல் நீரேரி மீது பறந்து கொணடிருந்த குருவிகளைக் கூட ரேடார் திரையில் அதிகாரிகள் கவனித்தனர். இந்தக் கப்பலில் அதிசக்தி வாய்ந்த - அதிநவீன - தொலைத் தொடர்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

கப்பலின் மேற்றளத்தில் செய்மதித் தொலைத் தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் அங்கு இரண்டு துப்பாக்கிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இந்தத் துப்பாக்கிகள் மூலம் 18 கி.மீ. தூரத்தில அமைந்துள்ள இலக்கு மீது இலகுவாகத் தாக்குதலை மேற்கொள்ள முடியும்.

இந்தக் கப்பலில் பணிபுரியும் 19 அதிகாரிகளுக்கும் 180 பணியாட்களுக்கும் நாளொன்றுக்கு சுமார் 45ஆயிரம் லீற்றர் தண்ணீர் தேவைப்படுகிறது. கடல் நீரைச் சுத்திகரித்தே இந்த நீர் பெறப்படுகிறது. சிறிதளவு தூசியைக் கூடக் கப்பலில் காண்பது அரிது. கப்பலில் உள்ள அனைத்து அறைகளும் குளிரூட்டப்பட்டுள்ளன. கப்பலின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் மணித்தியாலம் ஒன்றிற்கு லட்சம் வாற்ஸ் மின்சாரம் தேவைப்படுகிறது. இந்த மின்சாரத்தைப் பெறுவதற்கு கப்பலில் இரு அனல் மின் உற்பத்தி அமைப்புகள் உள்ளன. கப்பல் இரு ஜெட் இயந்திரங்களின் மூலம் செயற்படுகிறது. இவை செயற்படுவதற்கு நாளொன்றுக்கு சுமார் 9 ஆயிரம் லீற்றா எரிபொருள் தேவைப்படுகிறது.

சுமார் 3 மாதங்களுக்கு தொடர்ந்து கடலில் பயணம் செய்யத் தேவையான எரிபொருளை கப்பலில் வைத்திருப்பதற்கான எரிபொருள் களஞ்சியம் கப்பலில் உள்ளது.


சகல வசதிகளையும் கொண்ட இந்தக் கப்பலானது அமெரிக்கக் கடற்படையிலுள்ள கப்பல்களில் மிகவும் சிறிய கப்பலாகும்.

யுத்தத்தின்போது இத்தகைய கப்பல்களுடன் பாரிய கப்பல்களைச் சேர்த்து ஈடுபடுத்தும்போது அமெரிக்கக் கடற்படையினர் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை எரிபொருள் பிரச்சினையே ஆகும். எரிபொருளைப் பெறுவதற்காக கட்டாயமாகக் கப்பல் கரைசேர வேண்டியுள்ளது.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் யுத்தக்கப்பல்களுக்கு எரிபொருள் வழங்கக்கூடிய சிறந்த துறைமுகங்கள் ஸ்ரீலங்காவிலேயே உள்ளன. திருகோணமலைத் துறைமுகமானது உலகிலுள்ள ஒரேயொரு ஆழம் நிறைந்த இயற்கையான துறைமுகமாகும், இரண்டாவது உலக யுத்தத்தின் போது பிரிட்டிஷாரால் பயன்படுத்தப்பட்ட 99 எரிபொருள் குதங்கள் திருகோணமலையில் உள்ளன. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்போது சீனக் குடாவிலுள்ள 15 குதங்களை மாத்திரமே பயன்படுத்துகிறது. நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக ஏனைய குதங்கள் அமைந்துள்ள பகுதிகள் காடாகிவிட்டன.

திருகோணமலையில் எரிபொருள் குதங்கள் அமைந்துள்ள பகுதிக்கு அண்மித்து அமெரிக்கக் கடற்படைத் தளம் ஒன்று அமைக்கப்படவுள்ளது என அமெரிக்காவிலுள்ள புலனாய்வுத் தகவல் நிலையமான "ஸ்ரட்பர்" கடந்த ஏப்ரல் மூன்றாம் திகதி தெரிவித்தது.

மார்ச் 15ஆம் திகதி அமெரிக்க ராஜாங்க அமைச்சின் தென்னாசிய வட்டகைக்குப் பொறுப்பான செயலர் கிறிஸ்டினா றொக்காவுடன் அமெரிக்கக் கடற்படைத் தளபதி ஜெனரல் திமதி கொடலி யாழ்ப்பாணம் சென்றிருந்தார். அந்தப் பயணத்தின் நோக்கம் திருகோணமலையில் கடற்படை நிலையம் அமைப்பதே என ஸ்ரட்பர் நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.



அமெரிக்க யுத்தக் கப்பலான 'யு.எஸ்.எஸ்.ஹொப்பர்'

அமெரிக்காவில் வெளியாகும் "பினான்சியல் ரைம்ஸ" (FINANCIAL TIMES) என்ற பத்திரிகை கடந்த வருடம் ஒக்ரோபர் 3ஆம் திகதிய வெளியீட்டில் அவ்வாறே தெரிவித்தது. அமெரிக்கக் கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையமாக திருகோணமலையில் உள்ள எரிபொருள் குதங்களை வழங்க ஸ்ரீலங்கா அரசு இணங்கியுள்ளது. எனவும் அந்தப் பத்திரிகை தெரிவித்தது.

**தமிழில்: கஜனி**

இருப்பினும் இந்தக் கதைகளை ஸ்ரீலங்கா அரசும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகமும் நிராகரித்தன.

1987 இல் எட்டப்பட்ட இலங்கை இந்திய உடன்பாட்டின்படி திருகோணமலையிலுள்ள எரிபொருள் குதங்களை இந்திய அரசின் விருப்பத்திற்கு மாறாக வேறு எந்த நாட்டிற்கும் பயன்படுத்த வழங்குவது இல்லை என ஸ்ரீலங்கா அரசு உடன்பட்டுள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்திற்கும் எரிபொருள் குதங்களுக்கும் அமெரிக்கர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர் என்ற கதை பரவத்தொடங்கியதும் ஸ்ரீலங்காவிலுள்ள இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தி உட்பட பிரதிநிகளின் குழு ஒன்று கடந்த ஏப்ரல் முதலாம் திகதி திருகோணமலை சென்று எரிபொருள் குதங்களை செப்பனிடுவது பற்றி கலந்துரையாடியுள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தும்போது இந்திய அரசாங்கத்தால் இந்த எரிபொருள் குதங்கள் கொள்வனவு செய்யப்படக்கூடும் என அந்தப் பயணத்தில் இருந்து ஊகிக்கமுடிகிறது என கொழும்பிலுள்ள பொருளாதார விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டிய தேவை அமெரிக்காவுக்கு இருப்பதால் அதற்குப் பொருத்தமான இடம் திருகோணமலையே ஆகும். அங்கிருந்து 40 நிமிடங்களில் விமான மூலம் தமிழ்நாட்டின் தலைநகா் சென்னைக்குச் செல்ல முடியும்.

அமெரிக்காவின் இந்த முயற்சிகளுக்குத் தடைக்கல்லாக இந்தியா தற்போது எரிபொருள் குதங்கள் மீது கண்வைத்தவண்ணம் உள்ளது. இந்த நேரத்தில்தான் அமெரிக்க யுத்தக் கப்பல் ஒன்றுக்குப் பின்னால் ஒன்றாக ஸ்ரீலங்காவுக்கு வந்தவண்ணம் உள்ளன. இப்படியே போனால் காலப்போக்கில் ஸ்ரீலங்காவிலுள்ள துறைமுகங்கள் அனைத்தும் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் தரித்து நிற்கக்கூடும் என ஒரு சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர் அப்போது அது நாட்டிற்குப் புதிய விடயமாக இருக்காது. மெல்ல மெல்ல ஸ்ரீலங்கா அமெரிக்காவின் துறைமுகமாகவும் மாறக்கூடும். ☆

# சைவபரிபாலன சபை நடத்திய தேர்வு முடிவுகள் வெளியாகின

யாழ். சைவ பரிபாலன சபையினரால் கடந்த வருடம் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வு முடிவுகள் கடந்த புதனன்று வெளியிடப்பட்டுள்ளன.

தரம் 2 முதல் தரம் 12வரையிலான மாணவர்களிடையே நடத்தப்பட்ட மேற்படி போட்டிகளில் ஒவ்வொரு வகுப்பிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற முதல்மூன்று மாணவர்கள் முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப் பதக்கங்களைப் பெறுவர்.

ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர், பாடசாலை விவரம் வருமாறு:-

**தரம் 2**

டிலானி ஜெகநாதன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), அபிலாஷா சண்முகநாதன் (ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை), கர்ஜிகா கமலநாதன் (ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்).

**தரம் 3**

சங்கீதா பாலசுப்பிரமணியம் (நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி), சர்மிளா சிவராசா (துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை), கேசனா விஜயரத்தினம் (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்).

**தரம் 4**

சங்கீதனா செல்வராஜா (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), சௌந்தரராஜன் ஸ்ரீகர்ஷன் (அனலைதீவு வடலூர் அ.த.க. வித்தியாலயம்), அபிராமி அமிர்தலிங்கம் (சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்).

**தரம் 5**

சாயினி அருணகிரி (சென். ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்), பகீரதி சிவகுமார் (யாழ்ப்பாணக் கல்லூரி), கிரிஜா செல்வராசா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை).

**தரம் 6**

துவாரகி பாலசுப்பிரமணியம் (வேம்படி மகளிர் கல்லூரி), தயாபரன் திவாகர் (பரியோவான் கல்லூரி), நவரத்தினம் கேதீசகுமரன் (சண்டிலிப்பாய், இந்துக்கல்லூரி).

**தரம் 7**

பிரசாந்தி ரமேஸ் (வவு/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), கணபதிப்பிள்ளை வாகீசன் (ஹாட்லிக் கல்லூரி), சிறிஸ்கந்தராஜ் சேயந்தன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி).

**தரம் 8**

புஸ்பவிஜிதா பரமநாதன் (வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்), நிஷாந்தி விக்கினேஸ்வரமூர்த்தி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பேரின்பநாதன் ரவிக்குமார் (நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்.

**தரம் 9**

பாலசுப்பிரமணியம் பிரதீபராஜ் (யாழ்.இந்துக்கல்லூரி), ஸ்ரீபதிஐயர் சிந்தூரன் (யாழ். மத்திய கல்லூரி), தேவரஞ்சனா புவனேந்திரன் (சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்).

**தரம் 10**

சுபோஜனா நல்லதம்பி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), ஜெயஆனந்தராசா ஜெயபிரியந்தன் (மகாஜனக் கல்லூரி), சிவானதி செல்வநாயகம் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி).

**தரம் 11**

கனகரத்தினம் வாகீசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கார்த்திகா ஸ்ரீஸ்கந்தராஜா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), சிவகௌரி சிவலிங்கம் (வைத்தீஸ்வராக கல்லூரி).

**தரம் 12 இந்துநாகரிகம்**

தாப்பனா சிறிமகாதேவன் (யாழ் இந்து மகளிர் கல்லூரி), சரோஜா தேவி மார்க்கண்டு (மகாஜனக கல்லூரி), சூரியதர்சினி சூரியகுமாரன் (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**தரம் 12 இந்து சமயம்**

புஜங்கன் டானியல் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ஜாமினி விஜயரட்ணம் (அருணோதயாக் கல்லூரி), கிரிஜா தவராசா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

மேற்படி சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் என சைவ பரிபாலன சபையின் பரீட்சை செயலாளர் சைவப்புலவர் வசந்தாமி அறிவித்துள்ளார். (எ)

## அற்லஸ் இன்ரநஷனல் அசோசியேசன்
## கொமினிக்கேசன் சேவை

**கொழும்பு - யாழ்ப்பாணம்**
**யாழ்ப்பாணம் - கொழும்பு**

குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத வான் சேவைக்கு ஈடுபடுத்தப் படுவதுடன் பிரயாணிகளின் வசதிக்காக அவரவர் இடங்களில் கொண்டு சென்று விடப்படுவதுடன் வேண்டுமானால் இரு இடங்களிலும் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.

*தொடர்புக்கு:* யாழ்ப்பாணத்தில்:
அற்லஸ் இன்ரநஷனல்
இல.77, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2990
கொழும்பில்:
அற்லஸ் கொமினிக்கேஷன்
இல.227, சென்றல் றோட்,கொழும்பு - 12.
T.P.: 466720, 431498 (ஐந்துலாம்படிச் சந்தி)
(குறிப்பு: வெளிநாடுகளுக்கு விரைவு பொதிகள் சேவை).
(4088)


## பாராட்டு மகிழ்விழா

விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்திலிருந்து 2001ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் அதிஉயர் பெறுபேற்றைப் பெற்றுப் பாடசாலைக்கும் எமது கிராமத்திற்கும் புகழ் சேர்த்த மாணவர்களாகிய,

1. சி.சிவதீபா - 10 A
2. கா.சயந்தா - 4A, 3B, 3C
3. சி.சிவறூபா - 5A, 4B

ஆகியோரையும் உயர்தரம் கற்பதற்குத் தகுதிபெற்ற ஏனைய அனைத்து மாணவர்களையும்

அவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும

பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ கணேசானந்த
*விடத்தற்பளை.* சனசமூக நிலையத்தினர்.
(4140)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கட்டட ஒப்பந்தகாரர் மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியார்

**திருமதி மார்க்கண்டு இராசமலர்**

அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இராமநாதன் கல்லூரி,*
*சுன்னாகம்.* (4137)
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
கல்லூரி ஆசிரியர்கள், ஊழியர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**அன்னமுத்து கந்தையா**

தோற்றம் 13.05.1913
மறைவு 25.04.2002

அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*வராகி அம்மன் கோயிலடி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (4132)
பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண் மகிழ 16 - 01 - 1939



கண் நெகிழ 25 - 04 - 2002

**அமரர் கந்தவனம் கணேசு** *(அரசன்)*
*(ஓய்வுபெற்ற அதிபர், யா/ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை)*

அப்பா!
ஆதிமுதல் இன்றுவரை
பீதியின்றி வாழவைத்தவரே!
பாதியிலே "பா" இழந்து
நாதியற்று நிற்கின்றோம்!
மதியோடு வாழ்வதற்கு
மீதியையும் தந்திடுவீர்!

உங்களின் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்:
*கலை மணி ஒழுங்கை,*
*கட்டப்பிராய்.* (4123)
- குடும்பத்தினர்.

## மோசமான வீதி

கொழும்புத்துறை,மே25

அரியாலை, மாம்பழம் சந்திக்கும் 4 ஆம் சந்திக்கும் இடைப்பட்ட நாவலர் வீதிப்பகுதி திருத்தப்படாத நிலையில் மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது.

குறித்த வீதியால் பயணம் செய்வோர் வீதியோரங்களூடாக வாகனங்களை செலுத்துவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இப்பகுதியிலேயே கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (க-13-ரி)

## வீதிகள் புனரமைப்பு

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் பருத்தித்துறை நகர சபை 10 லட்சம் ரூபா செலவில் ஐந்து வீதிகளைப் புனரமைப்புச் செய்தது.

பருத்தித்துறை 1ஆம் கட்டை வீதி, ஜயனார் கலட்டிவீதி, 3ஆம், 4ஆம் குறுக்குவீதிகளை இணைக்கும் வீதி, கலட்டிவீதி, வெளிச்சவீட்டு வீதி என்பனவே இவ்வாறு புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. (க-13-ரி)

## சிறந்த இன நாற்றுக்கள்!

யாழ்ப்பாணம் விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் சிறந்த இன தக்காளி, கத்தரி போன்ற நாற்றுக்களை உற்பத்தி செய்துள்ளனர்.

மேற்படி நாற்றுக்களைப் பெற விரும்பும் விவசாயிகள் கோண்டாவில் மயானத்திற்கு அருகிலுள்ள கூட்டுறவுப் பண்ணையில்பெற்றுக் கொள்ளலாம் என்று விதை உற்பத்தி கூட்டுறவுச்சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (க-13)

## பொன்னாலை மக்கள் கண்காணிப்புக் குழு தலைவருக்கு மகஜர்

மூளாய், சுழிபுரம் வட்டுக்கோட்டைப் பகுதிகளில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இடம் பெயர்ந்து வசித்து வரும் பொன்னாலை வாழ் மக்கள், போர் நிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவருக்கு மகஜர் ஒன்றை சமர்பபர்த்துள்ளனர்.

சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்கக் கோரி பொன்னாலை வாழ் மக்கள் ஒன்றியத்தினால் அனுப்பப்பட்டுள்ள மகஜரின் பிரதிகள் அரசாங்க அதிபர், இந்து விவகார அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.(க-13-ரி)

## இசை நிகழ்ச்சி

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் மாதாந்த இசை நிகழ்ச்சி நாளை மறுதினம் திங்கட்கிழமை மன்ற கலா மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.

செல்வி கல்யாணி ஸ்ரீரங்கநாதனின் பாட்டுக் கச்சேரியும் செல்வி அஜந்தினி இராஜசேகரத்தின் மாணவர்கள் வழங்கும் "நாட்டியாஞ்சலி" யும் இடம்பெறும். (க-17)

## விருது வழங்கி குருக்களுக்கு பாராட்டு

உடுப்பிட்டி துவாளி விநாயகர் அம்பாள் ஆலயத்தைச் சேர்ந்த சிவ ஸ்ரீ அதிருஞானசம்பந்தக் குருக்களுக்கு 'பத்ததி வித்தக சிரோன்மணி' என்ற விருது வழங்கி கௌரவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மிருசுவில்வடக்கு மன்னன் குறிச்சி கந்தசுவாமி கோயிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு இவ்விருது வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

கோயில் மஹோற்சவத்தை சிறப்பாக நடத்தியதை முன்னிட்டு இந்த விருது குருக்களுக்கு வழங்கபபடுகிறது. (க)


## விற்பனைக்கு

**1.T.V.S. Suzuki India**
70 CC XL Supper
(Power Gear) புதியது.

**2.Bajaj Scooter Classic** 150 CC
*பாவனையில் உள்ளது.*

தொடர்பு:
***Guru Diesel Engineers***
*338,Stanley Road,*
*Jaffna.*
(3998)



## தேவை

**பஸ் சாரதி அனுமதிப் பத்திரமும் (லைசன்ஸ்) முன் அனுபவமும் உள்ள, நல்லொழுக்கமுடைய பஸ் சாரதி தேவை. சம்பள விவரம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும்.**

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*
**அற்லஸ் இன்ரநஷனல் அசோசியேசன்**
இல.77, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(4141)


## 31ஆம் நாள் நினைவு கூரலும் கண்ணீர் அஞ்சலியும்

எமது சக ஆசிரியை
**திருமதி றஞ்சினி பெனில்டஸ்** அவர்களின்
அன்புத் தந்தையார்

**அமரர் கந்தவனம் கணேசு**

அவர்கள் சிவபதம் அடைந்ததை இட்டு அவர்களின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்.
(4131)

## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

வையத்துள் அறிமுகம் 26 - 03 - 1964



தெய்வத்துள் சங்கமம் 07 - 06 - 1990

**செல்வி நர்மதா கனகரட்ணராஜா**
*(நடன ஆசிரியை யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)*

திதி: 25-05-2002

எங்கள் அன்பின் திருவுருவே!
ஆசையின் மணிவிளக்கே பாசத்தின் பிறப்பிடமே!
குடும்பத்தின் ஒளிவிளக்கே! எம்மை எல்லாம்
ஆறாத்துயரில் விட்டுவிட்டு, மீளாத்துயில் கொண்ட
அன்புச் செல்வமே! ஆண்டுகள் பன்னிரண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டகலாதம்மா

உங்கள் பிரிவால் துயருறும்:
*அம்மா, மாமன்மார், மாமிமார்,*
*சித்தப்பா, சித்திமார்.*
*தம்பிமார், தங்கைமார்.*
*சந்தையடி,*
*மானிப்பாய்.* (4125)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசையா பத்மாசனி

59, A.V. றோட், அரியாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசையா பத்மாசனி 21.05.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கிளரிக்கல் முத்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் வேலுப்பிள்ளை - பார்வதி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கமலாசனி கனகசிங்கம், டாக்டர் சதானந்தன், நீலோசனி முத்தையா (இளைப்பாறிய ஆசிரியை), வனசாட்சி தேவதாசன், செல்வி தவமணி முத்தையா, கணக்காளர் யோகானந்தன், Dr.கணேசானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி பத்மினி சுந்தரலிங்கம், யோகேஸ்வரன், திருமதி சாவித்திரி சிவபாதசிங்கம் (குணம்), திருமதி சுகுணா வள்ளுவன், திருமதி செல்வினி சிவலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுந்தரலிங்கம், சிவபாதசிங்கம், வள்ளுவன், சகுந்தலா, சிவலிங்கம், திருமதி குணவதி பாமதேவன், திருமதி மகேஸ்வரி தருமலிங்கம், காலஞ்சென்ற திருமதி லீலாவதி வேதநாயகம் ஆகியோரின் மாமியாரும், சுப்பிரமணியம் நடராசாவின் சிறிய தாயாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.விமலராஜா (விமலா)
*மருமகள்*
*59,A.V. றோட்,*
*அரியாலை.* (4135)

### இராசசிங்கம் கமலேஸ்வரி

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலேஸ்வரி இராசசிங்கம் நேற்று (24.05.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு சுவாமியார் - சோதிப்பிள்ளை தம்பதிகளின் ஏக புத்திரியும் கோண்டாவில் கந்தர் விசுவலிங்கம் - ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அருமை மருமகளும் ஞானம்மா, முத்துத்தம்பி, K.V.பசுபதி ஆகியோரின் மைத்துனியும் சிறீஸ்கந்தராசா, விஜயகுமார், சாந்தன், சரோஜாதேவி, இந்திரபூபதி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் இணுவில் மயில்வாகனம் சுப்பிரமணியத்தின் மைத்துனியும் லலா, தர்மம், செல்வநாயகி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவா.

இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2002) சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணிகசு தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராசசிங்கம் ஆசிரியர் (கணவர்),
விஜயன (தம்பி). (4136)
*59/1பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஆங்கில வகுப்புகள்

O/L, A/Lஇற்குத் தோற்றிய மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்: 28.05.2002. தொடர்பு: நாகேந்திரம், 34/4, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (4027)

## தவறிவிட்டது

48/1,ஏ.வி. றோட், அரியாலையைச் சேர்ந்த நவரட்ணம் புண்ணியமூர்த்தி என்பவரது தே.அ.அட்டை(இல. 570014200V) 17.05.2002 அன்று பரந்தனுக்கும் இயக்கச்சிக்கும் இடையில தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் No.37, புங்கன்குளம் வீதி, அரியாலை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (4112)

யாழ்ப்பாணம் முஸ்லிம் வீதியைச் சேர்ந்த உதயகுமார் பேபி என்பவரின தேசிய அடையாள அட்டை (697670912V), விசேட அ.அட்டை (0901030460) என்பன கறுப்புநிற பேர்ஸுடன் 21.05.02அன்று முஸ்லிம் வீதி, A.P.லேனில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் R.B. புக்கிங் சென்ரர், யாழ்.என்னும் முக வரியில் ஒப்படைக்கவும். (4121)

கன்கராஜர் மதியழகன் ஆகிய எனது கைப்பையும், கமராவும் 23ஆம திகதி முகமாலையில் இருந்து யாழ். வரும்போது பஸ் ஆசனத்தில் கைக குழந்தையுடன் இருந்த தாயாரிடம கொடுத்துவிட்டு திரும்பப்பெறாமல இறங்கிவிட்டேன். தயவுசெய்து வைத துள்ளவர் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள குகன் ஸ்ரோர்ஸில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4124)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

சுன்னாகம் சந்தை உட்புறத்தில் தங்க கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி சுன்னாகம் சந்தைப் பொறுப்பாளரிடம் பெற்றுக்கொள்ளவும். ஐ.சிவபாதசுந்தரம் (பச்சாய்), சுன்னாகம் சந்தை. (4101)

## பிறிமா கோழிக்குஞ்சு

பிறிமா கைலைன் பிறவுண் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 'மல்லிகாபதி', மானிப்பாய். (C/22237)

## தேவை

கோழிகளை பராமரிப்பதற்கு ஆள் தேவை. தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (4094)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (3949)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுகாதார முறைப்படி இலவசமாக சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்று கொள்ளலாம். தொடர்பு: சிவா பருத்தித்துறை வீதி, (வட்டக்குளம் முன்பாக) கட்டப்பிராய். (4095)

## விற்பனைக்கு

தொலைத் தொடர்பு நிலையங்களில் பாவிக்கப்படும் ரெலிபோன் பூத (Telephone Booth) மலிவு விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.139, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (4024)

பாவித்த நல்ல நிலையில் உள்ள MxPro.Nicks Video Mix (America) விற்பனைக்கு உண்டு. (இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டது) தொடர்பு: No.29, கோபால் லேன், வண்ணார்பண்ணை. (4104)

சகல வசதியுடன் கூடிய வீடும், 6 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.உதயகுமார், இல. 157, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (4077)

## வீடு விற்பனைக்கு

ஆனைக்கோட்டையில் வீட்டுடன் 14 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு . தொடர்பு: 95A, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (4067)

## வகுப்புகள்

Maths, English, O/Lஇல் A,B,C பெறுபேறடைய, ஆண்டு 9, 10 ஆங்கிலம் விசேடமாக, A/L, G.A.Q, B.Sc. (Cey) பட்டதாரியால கற்பிக்கப்படும். 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (3951)

தமிழ், ஆங்கில, தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் தையல்கலை அலங்காரம், கேக் ஐசிங் ஆகிய பயிற்சி வகுப்புகள் புதிய பிரிவு ஆரம்பம். 25.05.2002 8.30 மணிக்கு (புதிய நேரம்) அதற்கு முன் பதிவு செய்யவும். செல்வி கீர்த்தனா, சிவன் கோயிலடி, மயிலணி, சுன்னாகம். (4118)

# தென்மராட்சியில் வலுவிழந்தோர் 1,346 பேர்!

தென்மராட்சி,மே25

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆயிரத்து 346 பேர் வலுவிழந்தோராக உள்ளனர். பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் இவர்களின் விவரங்களைத் திரட்டியுள்ளனர்.

இவர்களில் விழிப்புலன் இழந்தோர் 211 பேரும், செவிப்புலன் இழந்தோர் 225 பேரும் உடல் வலுவிழந்தோர் 433 பேரும் மனநோயால் பீடிக்கப்பட்டோர் 115பேரும் பேசும் சக்தி இழந்தோர் 119பேரும் ஏனைய வலுவிழந்தோர் 243பேரும் அடங்குகின்றனர் என்று அந்த புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (க-117)

- இதயமதில் இறையிருந்தால் வாழ்வுதனில் நிறைவிருக்கும் -

## ஸ்ரீ தில்லைவெளிப் பிடாரி அம்பாள் ஆலய

## வேள்வி விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

*இன்னருளைத் தருவாய் அம்மா...*

நயினையுறை நாயகியே பிடாரியம்மா - உன்
நல்லருளை எமக்கென்றும் தருவாயம்மா!
தில்லை வெளியில் கோயில் கொண்ட பிடாரியம்மா - நீ
திருக்குளிர்ச்சி காணும் இந்த வேளை தன்னில்
எல்லையில்லா உயிர்குலங்கள் சிறந்து வாழ - உன்
இன்னருளை எமக்கென்றும் தாருமம்மா...

இறையருளை நாடும்:
ஸ்ரீ பிடாரி அம்பாள் சனசமூகநிலையம்
நயினாதீவு - 7

(4120)

## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

Vaddukoddai, Jaffna, Srilanka

REGISTER IMMEDIATELY FOR THE FOLLOWING COURSES (IDEALLY SUITED FOR THOSE WHO HAVE JUST SAT FOR THEIR G.C.E. (A/L) EXAMS)

* **Diploma Courses**
  * Diploma in Computer Progfamming & Data Processing
    Duration: 1 Year (full time)
* **Technician Certificate Courses**
  * Basic Engineering
  * Electronics
    Duration: 1 Year (full time)
  * Certificate Courses in Business & Scientific Applications
    Duration: 3-4 months

| | | |
|---|---|---|
| * MS Word | Visual Basic | C/C+ |
| * MS Excel | FoxPro | Pascal |
| * MS Access | Java | |
| * MS Power Point | | |

**Application forms are available at**
- JCIT, Vaddukoddai
- Jaffna College Undergraduate Dept., Hospital Road, Jaffna.

Our Diploma courses lead to examinations from
- City & Guilds of London Institute
- Australian Computer Society (ACS)
- British Computer Society (BCS)
- Institute of Computer Technology, University of Colombo

Facilities
- LIBRARY
- HOSTEL
- SPORTS

**For Further Details Contact**

Director
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.

Tel.No.: 070-213139 (C/22277) e-mail: jcit@sltnet.lk

## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 17 - 04 - 1916



இறப்பு 25 - 05 - 1981

**கலாநிதி ஆ.தியாகராசா** M.A. M.LITT

*(முன்னாள் தேசிய பேரவை உறுப்பினர், முன்னாள் அதிபர் - கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், காரைநகர்)*

*தியாகராசா அதிபராக செய்த தியாகங்கள் எத்தனையோ?*
*தேசிய பேரவை உறுப்பினராக செய்த சேவைகள்தான் எத்தனையோ?*
*அத்தனையும் நாம் வாழ்வதற்காய் நீ செய்தாய்! உன்னையே நீ அளித்தாய்!*
*உத்தமனாக வாழ்ந்த உன்னை உலகில் எப்போ காண்போம் ஐயா?*

*"தவபவனம்"*
*பொன்னம்பலம் வீதி,*
*காரைநகர்.* (C/22276)

உங்களை என்றும் மறவாத மாணவன்
சி.சிவபாதம்
(வங்கியாளர்)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து




## செல்வன் க.நிலக்ஷன்

திரு.கருணாநிதி ~ திருமதி கலாதேவி தம்பதிகளின்
**செல்வப் புதல்வன் செல்வன் நிலக்ஷன்**

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று(25.05.2002) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். நிலக்ஷனை அன்பு அப்பா, அம்மா. அக்காமார், அண்ணாமார், சித்திமார், மாமா, மாமி, அம்மம்மா, தாத்தா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகாலம் நீடுழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

- திரு.க.கருணாநிதி.

*பண்டிதர் வளவு,*
*கரவெட்டி மேற்கு, கரவெட்டி.* (4105)

## இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு
## பனை அபிவிருத்திச் சபை

# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு தகுதியான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### செயலாளர்

**கல்வித்தகைமைகள்:**

பட்டதாரியாக இருப்பதுடன் அரச திணைக்களம் அல்லது ஏதாவதொரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மூன்று வருட காலம் குறிப்பிட்ட பதவியில் அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

அல்லது

பட்டயச செயலாளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றவராகவும், கோரப்படும் பதவியில் ஐந்து வருடகால அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

### கணக்காளர்

**கல்வித்தகைமைகள்:**

ACA, CIMA அல்லது ACCA அத்துடன் கணக்காளராக அல்லது உதவிக் கணக்காளராக அரச நிறுவனத்தில் அல்லது ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 5 வருட அனுபவம்.

அல்லது

ACA, அல்லது CIMA அல்லது ACCA, இடைநிலை தேர்ச்சி சான்றிதழுடன் அரசதுறை அல்லது ஏதாவதொரு அங்கீகரிககப்பட்ட நிறுவனத்தில் கணக்காளர் சேவையில பத்து வருடகால அனுபவம்.

அல்லது

வர்த்தகப் பட்டதாரியாக இருப்பதுடன் கணக்காளர் பதவியில் பத்து வருடகால அனுபவம்.

அல்லது

பனை அபிவிருத்திச் சபையில் நிதி உதவியாளராக 15 வருட கால அனுபவம்.

**சம்பளத்திட்டம்:**

ரூபா 86,700.00 - 15 x 2700 - 127200
(அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்)

**வயது எல்லை:**

45 வயதுக்கு உட்பட்டவராக இருக்கவேண்டும், அரசசேவை அல்லது கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றுபவர்களுக்கு வயதெல்லை கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

தெரிவுசெய்யப்படுபவர் யாழ்ப்பாணத்திலுள்ள தலைமைக்காரியாலயததிலும், கொழும்பு நகர அலுவலகத்திலும் கடமையாற்றுமாறு கோரப்படுகின்றனர்.

பூரண சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் உறவினரல்லாத இருநடுவர்களின் பெயர்களுடன் கல்விச் சான்றிதழ், தொழில்சார் சான்றிதழகளின் பிரதிகளும் இணைக்கப்பட்டு பதிவுத்தபாலில் 10.06.2002ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

தலைவர், பனை அபிவிருத்திச் சபை, 244, காலி வீதி, கொழும்பு-04 அல்லது தலைவர், பனை அபிவிருத்திச் சபை, 53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

அரச திணைக்களம், கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள் திணைக்களம்/கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கு ஊடாக விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

பொ.சிவபாதம்
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை. (C/22273)

| | | | |
|---|---|---|---|
| | தி. | கு. ▲ சனி இரா. | வெ. செவ். வி. |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | |
| | கே. சந். | | |

# இந்த வார இராசி பலன்

## 26.05.2002 ~ 01.06.2002

### மாற்றம்

அனுகூஷம் - சந்திரன் விருச்சிகத்தில் நிற்கும்.

சமாதானப் பேச்சு மெல்ல மெலலத் தொடரும். நோர்வே இந்தியாவுக்கு விசுவாசமாக இருக்கும். அரசியல் தலைவர்கள் தடுமாறுவார்கள். சமாதானப் போர் எனச் சொலலிச் சில நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். இந்தியா காஷ்மீரைப் பிடிக்கும். அனு ஆயுத அழிவுகள் ஏற்பட்டு இமயமலைச் சாரலில் அதிர்வுகள் ஏற்பட இடம் உண்டு. மேற்கு நாடுகள், மத்திய அரபுநாடுகளில் நடவடிக்கைகளை எடுக்கலாம். மேற்கு நாடுகள், முஸ்லிம் தீவிரவாதிகள் பல அழிவுகளைச் செய்வார்கள். பசுபிக், இந்து சமுத்திர பிராந்திய நாடுகளில் இயற்கையின் சீற்றமும் விட்டு விட்டு செயற்கை அழிவுகளும் தொடரும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

பொருள் விடயத்தில், அண்ணன், தம்பி எனப் பார்க்க முடியாது. தொழில் விடயத்தில் அறிமுகமானவர், நண்பன் எனப் பார்ககக்கூடாது. தொழில்ஸ்தானத்தில் அடிக்கடி பதற்றநிலை வரும். தீயவர்களின் ஆலோசனை கெடுதியைத் தரும். அந்நியர்கள் உதவிசெய்தல், குடும்பத்தினரின் நன்மைகளுக்காக ஓடியாடித்திரிதல். சாதுரியப் பேச்சு சாதகமாக காரியங்கள் கைகூடும். தாய் வழியினா் வருகை, இடமாற்றங்கள் என்பன வரும். நாரிநோ, கிருமி பூச்சி வருத்தல், உஷ்ண பீடைகள், கண் கூச்சம், சிவத்தல், வாய்வுத் தொல்லை என்பன வரும், பாதுகாப்புத்துறை, கலைப் பொருள் விற்பனைத்துறை, மருநதுத்துறை, ரி.வி., டெக்துறை போன்ற துறையினருக்கு மாற்றங்களும் முன்னேற்றங்களும் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்*

### இடபம்

பாதையிலே நெருக்கடி, மக்கள பரிதவிக்கும் நிலை, பாதுகாப்பு அற்ற நிலை இந்தநிலை மாறவேண்டும். நீங்கள் தொழில்ஸ்தானத்தில் பிறரின் கஷ்டங்களைப் போக்க முயற்சி எடுப்பீகள். சிலசமயம் குறைகுற்றம் கேட்பீகள. எதிரிகள் உங்களுக்கு எட்ட நிற்பா். பெரியவர்களின் ஆலோசனை, சிலா் மந்திரதந்திர பிரயோகம், குடும்பத்தில் கலகலப்பு இருக்கும். அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் உதவி தருவர். தொண்டை நோ, சலவருத்தம், ஈரல் வியாதி என்பன வருத்தும். செய்தித்துறை, சினிமாத் துறை, நகைத்துறை, புடைவைத துறை போன்ற துறையினா்கள் முன்னேற்றம் அடைவர். தூர இடங்களுக்கு பிரயாணங்களை தவிர்த்தல் நன்று.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள் புதன்.*

### மிதுனம்

நாட்டில் சட்டதிட்டம் சீரில்லை, வாகனத்திற்கு லைசென்ஸ் கொடுக்க அதிகாரிகளை முறையாக நியமிக்கவில்லை, வாகனககாரரை எப்படிப் பொலீஸ் பிடிக்கும் என மக்கள் கேட்பதில் நியாயமுண்டு. தொழில் ஸ்தானததில் சட்டதிட்ட ஒழுங்கு குறையும். மேலதிகாரிகளின் கண்டிப்பு இருக்கும். இடைக்கிடை தடுமாற்றம் ஏற்படும். எதிர்ப்பாலார்கள் குறை சொல்லுவார்கள். வாதம் வருத்தும், அடிக்கடி கோபம் வரும், வாய்வுத் தொல்லை, பிடிவாதம் என்பனவும் விவசாயத்துறை, எண்ணெய்த்துறை, இரும்பு வியாபாரத்துறை, சந்தைத் துறை போன்ற துறையினா்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள் திங்கள், புதன்.*

### கடகம்

என்ன நடக்குமோ? என்ன நடக்குமோ? திரும்பச் சண்டை தானோ என்ற ஏக்கநிலை மக்களுக்கு. உங்கள் தொழில்ஸ்தானத்திலும் உங்களுக்கு ஏக்கநிலை ஏற்பட இடமுண்டு. சிலா் கோள் சொல்லுவார்கள். புத்தி சாதுரியமாக செயற்படுங்கள். குடும்பத்தில் எதிர்ப்பாலாருடன் வாக்குக் கலகம் ஏற்படும். கடனபடுநிலை ஏற்படும். வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்களால் சிலருக்கு நன்மை ஏறபடும். சலவருத்தம் உஷ்ண பீடைகள் கொடுக்கும். நகைத் துறை, செய்தித்துறை, போக்குவரத்துத்துறை, கடல்துறை, போன்ற துறையினா்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன், சனி.*

### சிங்கம்

என்னதான் செய்தாலும் பழைய பல்லவிதானே என்ற மனச்சோர்வு உங்களுக்கு. முயர்ச்சியுடையார் இகழ்ச்சி அடையார். படிப்படியான மாற்றங்கள் கொடுக்கும் தொழில் ஸ்தானத்தில் மனச்சோர்வு அடையாமல் ஊக்கமாக இருங்கள். வீடு மனையில் மாற்றங்கள் ஏற்படும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். பொருள்வரவு ஏற்படும். புதிய திட்டங்கள், மேலதிகாரிகளின் உதவிகள் என்பன கொடுக்கும். கண் வருத்தம், காலில் அடிகாயம், தொண்டை நோ, உஷ்ணபீடைகள், அடிக்கடி கோபம் என்பன வரும். பிரயாணங்களைத் தவிர்க்கவும் அல்லது பொருள் இழப்பு ஏற்படும். போக்குவரத்துத்துறை, மருந்துத்துறை, குருத் துறை, கமிஷன்துறை, புடைவைத் துறை போன்ற துறையினா்களுக்கு நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: புதன், சனி.*

### கன்னி

காதலிப்பவர்கள் ஏன் பொருத்தம் பார்க்கின்றார்கள்? பொருத்தம் இல்லை என்றால் காதலை விட்டு விடுவார்களா? மனப் பொருத்தம் என்பது விதியின் விளையாட்டு ஆகும். நன்மையும் வரும். தீமையும் வந்து வருத்தும். தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் அதிகரிக்கும். புதிய திட்டங்கள் வகுப்பார்கள். அயலவர்களின் உதவிகள் கிடைக்கும். இடமாற்றம் வரும். பொருள் இழப்பு வரும். பிரயாணம் நன்மை தரும். தூரத்துச் செய்திகள் புதிய நன்மைகளைச் செயற்படுத்த வழி வகுக்கும். சகோதரங்களுக்கு சுகயீனம் வரலாம். சளித்தொல்லை, வாத உளைவு, வாய்வு என்பன கொடுக்கும். போக்குவரத்துத்துறை, செய்தித்துறை, கடல்துறை என்பன நன்மை தரும்.

*அதிர்ஷ்ட நாள்: புதன், சனி.*

### துலாம்

சந்தர்ப்பங்கள்தான் மனித வாழ்வில் ஒருவருக்கு மேல், கீழ் நிலைகளை உருவாக்கக் காரணியாக உள்ளது. எனவே தொழில் ஸ்தானத்தில் உங்களுக்குக் கிடைக்கும் முன்னேற்றத்தைப் பெரியவர்களின் உதவியுடன் செயற்படுத்துங்கள். தூரத்துச் செய்திகள் வரும். இடமாற்றங்கள் நன்மைதரும். எதிர்ப்பாலார் வாக்குக் கலகம், தாய் வழி உதவி கிடைக்கும். புதிய ஆடை, நகை பொருள்கள் வர இடம் உண்டு. தோல் வருத்தம், நரம்பு வருத்தம், குடல் வியாதி, வயிற்று வருத்தங்கள் என்பன கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: புதன், சனி.*

### விருச்சிகம்

ஒருவருக்கு அவரவர் இராசி அல்லது நட்சத்திரத்திற்குப் பொருத்தமான வீட்டின் வாசல்கள் உள்ளன. அதற்குத் தகுந்தாற்போல வீட்டை அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். தொழில் ஸ்தானத்தில் சக ஊழியர்களுடன் வாக்குக் கலகம் வரலாம். தூர இடப் பிரயாணங்களை ஒத்திப் போடுங்கள். உடல் நலப் பாதிப்பு வரும். நண்பர்கள் உதவி செய்வார்கள். விருந்தினா் வருகை என்பனவும், சலவருத்தம், நரம்பு, கைகால் வருத்தம், நாரிநோ என்பன வரும். புத்திரரின் சிறப்புக்கள் அல்லது அவர்களுக்கு இடமாற்றங்கள் கொடுக்கும். போக்குவரத்துத்துறை, இரும்புத்துறை, மருந்துத்துறை, தொழில்நுட்பவேலை, மார்க்கட் வியாபாரம் போன்ற துறையினா்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: புதன், சனி.*

### தனுசு

தொழில்ஸ்தானத்தில் ஒருவர் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். அதனால்தான் அவரால் அந்தஸ்தானம் வளரும். அந்தஸ்தானத்தின் வளர்ச்சியால் அவரும் வாழ முடியும். தொழில்ஸ்தானத்தில் புதியவா்கள் வருவார்கள். பல புதிய திட்டங்கள் உருவாக இடமுண்டு. உறவினா்கள் உதவி செய்வார்கள். பிள்ளைகளிடம் அல்லது சகோதரா்களிடமிருந்து நற்செய்தி வரும். குடும்பத்தில் கலகலப்பு ஏற்படும். எலும்புத்தாக்கம், வயிற்றுநோ, கால்பிடிப்பு, நாரிநோ என்பன கொடுக்கும். வங்கித்துறை, ஆசிரியத்துறை, நகைத் துறை, ரி.வி.டெக் துறை போன்ற துறையினா்களுக்கு நற்பலன் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன், சனி.*

### மகரம்

புதிய விளக்குமாறு வடிவாய்க் கூட்டும் - பழைய இடத்தைத் தானே கூட்டப்போகிறது என சிந்திப்பீர்களா? உண்மைதான். தொழில்ஸ்தானத்தில் வாக்குச் சாதுரியத்தால் காரியங்கள் இலகுவாகும். எதிர்ப் பாலார் உதவிகள் செய்வார்கள். புதிய நகை அல்லது ஆடைகள் வர இடமுண்டு. குடும்பத்தினா்களுக்கு நன்மைகள், மாற்றங்கள் ஏற்படும். நண்பா்கள் சிறப்பு அடைவார்கள். மனக்குழப்பம், வயிற்று வருத்தம், மூட்டுவலி, தலைவலி, வாதப்பிடிப்பு என்பன கொடுக்கும். நகைத்துறை, செய்தித்துறை, போக்குவரத்துத் துறை போன்ற துறையினா்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்,சனி.*

### கும்பம்

தவறுகள் மலிகின்றன. களவுகள் கூடிக்குறைவது ஏன்? நாட்டின் சட்ட திட்ட ஒழுங்குமுறை உறுதியானால் ஏன் சட்டமுறையற்ற தவறுகள் நடக்கின்றன. தொழில்ஸ்தானத்தில் ஒழுங்கற்ற தவறுகளைக் கண்டு மனம் குமுறுவீர்கள். சிலருக்கு இடமாற்றம் வரும். புதிய பொறுப்புக்களும் வந்துசேரும். உங்களின் நல்ல மனத்தால் பலா் பல உதவிகளைப் பெற்றுப் பலன் அடைவார்கள். அரச அதிகாரிகள், அரசியல்வாதிகளின் உதவிகள் கிடைக்கும். பித்தமயக்கம், இனஜன பிரிவுத்துயா், சஞ்சலம், உஷ்ணவியாதி, நாரிநோ, கைகால்த்தாக்கம் என்பனவரும். எண்ணெய்த்துறை, குருத்துறை, பிரயாணத்துறை, நகைத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினா் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், சனி.*

### மீனம்

காலங்கள் மாற மக்களின் மனக் கருத்துக்களும் மாறுகின்றன. பாதை திறந்துவிட்டால் மக்களின் கஷ்டங்கள் குறையும். வரி அறவிடுவதை நிறுத்தினால் மக்களின் ஆதரவு என்றும் இருக்கும். தொழில்ஸ்தானத்தில் விட்டுவிட்டுக் கலக்கம் கொடுக்கும். தூரதேசச் செய்தியால் மகிழ்ச்சி வரும். கடன் பாக்கி சிலருக்கு வரும். பழைய இடங்களை நாடும் சூழ்நிலைகள் வரும். உறவினா்கள் உதவிகள் செய்வார்கள். இடமாற்றங்கள் நன்மை தரும். சளித் தொல்லை, நாரிப்பிடிப்பு, இரத்தம், சல வருத்தங்கள், வாய்வுத் தொல்லை வரும். கடல்துறை, பிரயாணத்துறை, குருத்துறை, ஆராய்ச்சித்துறை. விவசாயத்துறை, தோட்டத்துறை போன்ற துறையினா்கள் பல நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

---

# பல சமயத்தவருக்கும் உரித்தான வைகாசி விசாகத் திருநாள்

**இன்று வைகாசி விசாகத் திருநாள். அதனை முன்னிட்டு இக்குறிப்புப் பிரசுரமாகிறது.**

இன்று வைகாசி விசாகத் திருநாள். அகிலமெங்குமுள்ள இந்துக்கள், பௌத்தர்கள், வைஷ்ணவர்கள் இத்தினத்தை புனித விரத நாளாகக் கருதி இறைவழிபாடுகளில் ஈடுபடுவர். இப் புண்ணிய நாளில் அன்புடன் இறைவழிபாடு புரிபவர்கள் பாவங்களினின்றும் நீங்கி புண்ணியம் பெற்று இகம், பரம், வீடு என்ற மும்மை நலனகளையும் எளிதில் பெறுவர். நட்சத்திர விரதங்களுள் மிகச் சிறந்த விரதம் இதுவாகும்.

இந்துமக்களைப் பொறுத்தவரையில் வைகாசி விசாகம் 'கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய'. என்று கந்தபுராணம் கூறுவது போல் கலியுகவரதன் முருகப் பெருமான் உதித்த வைகாசி மாத விசாக நட்சத்திரத் தினத்தை திருநாளாகக் கருதுவர்.

அபயகரம் காட்டி மக்களைக் காக்கும் ஆறுமுகனின் அற்புத சக்தியை இன்றைய தினத்தில் நாம் உணர்வதே தெய்வீகமாகும்.

சில இடங்களில் வைகாசி விசாகத்தை யமதர்மராஜாவின் தினமாகவும் கொண்டாடும் வழக்கம் உண்டு. இத்தினத்தில் யமதர்மராஜனை வழிபட்டு நரகபயத்திலிருந்து மீட்சிபெற வேண்டுமென்பது ஐதீகம்.

**சமூகஜோதி**
**கா.கணேசதாசன்**

வைஷ்ணவர்களும் இத்திருநாளைக் கொண்டாடுவர். மெய்யன்புடன் விஷ்ணுபெருமானின் புகழ்பாடிய நம்மாழ்வார் அவதரித்த தினம் இது என்பதால் வைஷ்ணவர்களும் இத்தினத்தை விசேடதினமாகக் கருதுவர்.

**பௌத்தர்களின் தினமுமாகும்**

வைகாசி விசாகத் திருநாள் தொடங்கி இருநாள்களை 'வெசாக்' என்று பௌத்த மதத்தவரும் ஆன்மீக, ஆசார முறைப்படி கொண்டாடுவர். பௌத்தமதம் உயரிய கோட்பாடுகளை கொண்டது. அதன் தத்துவ அடிப்படைகள் அன்பு, கருணை, சகிப்புத்தன்மை, மனிதநேயம் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன.

கௌதமபுத்தர் இப்பூமியிலே பிறப்பெய்தியதும், ஞானம் பெற்றதும் பரி நிர்வாணமடைந்ததும் இத் தினத்திலே என்பதால் பௌத்தர்களுக்கு புனித தினமாக இது கருதப்படுகின்றது.

இவ்வருடம் விசாகத் திருநாளாகிய இன்று முஹமது நபிகள் நாயகம் அவர்களது பிறந்த திருநாள் அமைவதால் இஸ்லாமியச் சகோதரர்களும் எம்முடன் சேர்ந்து கொண்டாடி மகிழும் சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளார்கள்.

விசாகத் திருநாளில் இன்று பௌத்த, இந்து, இஸ்லாமிய மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுக் கொண்டாடுவது போல் இலங்கையில் சகல இன மக்களிடையேயும் ஒற்றுமையேற்பட்டு நிரந்தர சமாதானம் மிளிர வேண்டுமென பிரார்த்திப்போமாக.

★

## பாடசாலைகளின் நூல் நிலையங்களுக்கு தளபாடங்கள்

யாழ்ப்பாணம்,மே25

யாழ்.மாவட்டத்தின் 7 பாடசாலைகளுக்கு நூல் நிலையங்களுக்கான தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன.

கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்ட இந்த தளபாடங்கள் இன்று சனிக்கிழமை உரிய பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளதாக யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, யாழ். பெரியபுலம் ம.வி., நெல்லியடி ம.ம.வி., வட.இந்து மகளிர் கல்லூரி, புற்றளை ம.வி., இமையாணன் த.க.பாடசாலை ஆகியவற்றுக்கே தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன.(க-10)

## கட்டடப் பணி மீண்டும் ஆரம்பம்

கொழும்புத்துறை,மே25

யாழ்.முற்றவெளியில் அமைக்கப்பட்டுவரும் பிரதம தபாற் கந்தோரின் கட்டுமானப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களாக இக் கட்டட கட்டுமான வேலைகள் முடங்கிப்போய் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-ரி-13)


## கண்ணீர் அஞ்சலி

யா/புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக்கடமையாற்றும்
சு.பரமேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தையாரான

**சின்னையா சுப்பிரமணியம்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்,
புங்குடுதீவு.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.

(4139)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
செ.சந்திரகுமாரன் அவர்களின் அன்புத் தந்தை

**சிவகுரு செல்லத்துரை**

22. 05. 2002இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

யாழ்.போதனா வைத்தியசாலை
தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.

(4129)

## விற்பனைக்கு

நகைக்கடை தளபாடங்களும் வீட்டுப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: திருமதி G.இந்திரா
136, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் (9.00 - 4.00) மணிவரை பார்வையிடலாம். (4142)


## வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

### தொண்டமனாறு

மேற்படி ஆலயத் தேர்த்திருவிழா இன்று (25.05.2002) சனிக்கிழமை 12 மணியளவில் நடைபெறும்.

மஹோற்சவகுரு : கிரியாகலாபமணி
க.நாகேஸ்வரக்குருக்கள்
எழுதுமட்டுவாழ்

(4156) அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கலாநிதி ஆ.தியாகராசா எம்.ஏ., எம்.லிட். அவர்கள்**

*(முன்னாள் அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்)*

அன்பருக்(கு) எளியனாகி அனைவரும் வாழ வேண்டி
ஆசை கொண்டே
இன்புடனே பணிகள் தாம் பல்லவரும் போற்றிடவே
இயற்றி நின்றாய்!
என்பொன்னே தியாகராச ஏந்தலே - எம்
தக்கோவே மறவோம் ஐய!
முன்பொடுஎம் கல்லூரி முதல்வனாய் நின்றனை-நின்
புகழே வாழி!

காரைநகர். (C/22286)
யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.
வித்தியாலய சமூகம்.

## கோண்டாவில் தில்லையம்பதி
## அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

### "தில்லையம்பதியாள் கீர்த்தனை" பாகம் III
### ஒலிப்பதிவுநாடா வெளியீட்டுவிழா

இடம் : தில்லையம்பதி திருக்கோயில் முன்றில்
காலம் : இன்று (25-05-2002) சனி நண்பகல் 12 மணி

பாடல்கள்
இயற்றியவர் - அருட்கவிசெம்மல்
பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர்

பாடியவர்கள்: தென்னிந்திய பிரபல பக்திப் பாடகர்கள்
சீர்காழி G.சிவசிதம்பரம்
T.M.S.செல்வக்குமார்

"தில்லையம்பதியாளே சிவகாமசுந்தரியே சரணம்"

தில்லையம்பதி. (4148) - பரிபாலனசபை.



## கண்ணீர் அஞ்சலி

எமது குடும்ப நண்பர் மார்க்கண்டு அவர்களின்
அன்பு மனைவி

### திருமதி மார்க்கண்டு இராசமலர்

அவர்கள் திடீர் இறைபதம் எய்திய செய்தியைக் கேட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரர் மா.தர்மலிங்கம்
குடும்பத்தினர்.

தர்மரூபன் பல்பொருள் வாணிபம்,
மானிப்பாய். (C-22288)

## மரண அறிவித்தல்

### திருமதி மார்க்கண்டு இராசமலர்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ். வீதி, மருதனார்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு இராசமலர் 23.05.2002 வியாழக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2002) சனிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.மார்க்கண்டு
(கட்டட ஒப்பந்தகாரர்)

கே.கே.எஸ். வீதி,
மருதனார்மடம். (4166)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே25

யாழ். மாவட்ட கல்வி வலய பாடசாலை அணிகளுக்கிடையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை காலை 8 மணி முதல் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

**17 வயதுப் பிரிவு**

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் நயினாதீவு ஸ்ரீ கணேச வித்தி.

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் பளை ம.வித்.

**19 வயதுப் பிரிவு**

யா/புனித யோசவ் வித்தி எதிர் சேர்.வைத்திலிங்கம் துரைசாமி வித்.

யா/புனித அந்தோனியார் கல்லூரி எதிர் வரணி ம.வித்தி.

(ஒ-ரி-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே25

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட மரதன் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் யாழ்ப்பாணத்திலிருந்து கலந்துகொண்டோரில் 8பேர் இம்முறை தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

மரதனோட்டத்தில் ஆண்கள் பிரிவில் க.ஜெயானந்தம் (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), அல்பேட் உதயராஜன் (நெடுந்தீவு), ஜெ.யதீஸ்வரன் (வேலணை), பெண்கள் பிரிவில் எஸ்.பிறேமினி (தெல்லிப்பழை), பிறேமலக்ஷ்மி (நெடுந்தீவு) ஆகியோரும் -

சைக்கிள் ஓட்டப்போட்டியில் நிர்மலேஸ்வரன் லோகேஸ்வரன் (இருவரும் சண்டிலிப்பாய்) பெண்களில் பருவநிலா (தெல்லிப்பழை) ஆகியோர் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட வீரர்களாவர்.

இவர்கள் பங்குபற்றும் தேசிய மட்டப் போட்டிகள் ஓகஸ்ட் மாதமளவில் நடைபெறும் என யாழ்.மாவட்ட விளையாட்டதிகாரி திருமதி ஜெ.எ. எவ்.ரூபசிங்கம் தெரிவித்துள்ளார்.

(ஒ-ரி)


**நிறைஞ்சனாஸ்** சங்கானை
LEONARD DIC APRIO
KATE WINSLET
டைட்டானிக்
(தமிழாக்கம்)
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C-22147)

**நாகம்ஸ்** சுன்னாகம்
மாதவன், சிம்ரன், பிரகாஷ்ராஜ்
மற்றும் வசுந்தராதாஸ் நடிப்பில்
கன்னத்தில் முத்தமிட்டால்
(ரீஸ்ஸ்)
காட்சிகள்: 11 ,3, 6.30 (புதிய நேரம்)
(4146)

**ராஜா** யாழ்ப்பாணம்
7ஆவது ஜனத்திரள் வாரம்
இளையதளபதி விஜய், உலக அழகி
பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
தினசரி: 10.30, 2.30
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)
(C/22146)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி நடராசா

(இணுவில் மேற்கு)

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி நடராசா நேற்று (24.05.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசாவின் அன்பு மனைவியும் நடேஸ்வரி, நகுலேஸ்வரி, நாகேஸ்வரி, பகவற்கீதா ஆகியோரின் அன்புத் தாயாரும் செ.செல்வராசா (அதிபர், தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை), காலஞ்சென்ற செ.சண்முகநாதன் (ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி), செ.ஜெயசோதிவரதன் (ஆசிரியர் - சென்.ஜோசப் வித்தியாலயம், யாழ்ப்பாணம்), த.பாஸ்கரன் (உரிமையாளர் - பிள்ளையார் ஸ்ரோர்ஸ், இணுவில் கிழக்கு) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மூ.கதிர்காமநாதன், மூ.இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவாநந்தினி, சுகந்தினி, ரம்மியா, தாட்சாயினி, வாகினி, மயூரா, இலக்சப்பிரதன், அருணன், கபிலவாகீசன், திருமால்மருகன், மாதுமை, ஞானலக்சுமி ஆகியோரின் அன்பு அம்மம்மாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2002) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.ஜெயசோதிவரதன்
(வரதன் ஆசிரியர் - மருமகன்)

இணுவில் மேற்கு,
இணுவில். (4150)

### திருமதி சிவயோகம் அநவரதவிநாயகமூர்த்தி

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

திருநெல்வேலி, கலாசாலை வீதியைச் சேர்ந்த சிவயோகம் அநவரதவிநாயகமூர்த்தி (ஓய்வுபெற்ற ஆசிரியை, இந்து தமிழ் கலவன் பாடசாலை) அவர்கள் 22.05.2002 புதன்கிழமை கொழும்பில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் வைத்திலிங்கம் அநவரதவிநாயகமூர்த்தியின் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்) அன்பு மனைவியும் அருளம்பலம் தையல்முத்து அவர்களின் இளையமகளும் காலஞ்சென்ற செல்லப்பா, சிவமணி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கதிர்காமநாதன் (ஆசிரியர்), சுப்பிரமணியசிவம், தையல்நாயகி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனியும் சிவகுமார், சிவகௌரி (விரிவுரையாளர், திறந்தவெளி பல்கலைக்கழகம்), சிவானுசாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவபாக்கியம்
(சகோதரி)

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (C/22284)

### செபஸ்ரியாம்பிள்ளை சவரிமுத்து

(பொன்னையா)

மானிப்பாய் வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை சவரிமுத்து 22.05.2002 புதன்கிழமை காலமானார்.

அன்னார் நேசம்மாவின் கணவரும் சூசைமுத்து புஸ்பராணி அன்ரனிதாசன் (நோர்வே), லில்லிமலர் (கனடா), ரமனி (கனடா), மேரி சரோயா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞானேஸ்வரி நோபேட் (நோர்வே), மரியநாயகம், இராயேஸ்வரன் (கனடா), அன்ரனிதாசன் (கனடா) சுலோசனா (பபா - நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜிதா, றீகன், தினேஸ்குமார், பாமா, ஜெயந்தன் (நோர்வே), ஸ்ரலா (கனடா), யசோ (நோர்வே), கனுயன் (கனடா), யுசிதா (கனடா), நுசாந்தினி (கனடா), ஸ்ரவனி, ஜெனி (கனடா), ஜனனி (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும் சிந்துயா (கனடா), கீர்த்துயா (கனடா) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (26.05.2002) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
J.மரியநாயகம் (மருமகன்)

மெமோறியல் லேன்,
மானிப்பாய். (4161)

### திருமதி விநாயகம் நாகரத்தினம்

துன்னாலையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி விநாயகம் நாகரத்தினம் அவர்கள் 21.05.2002 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகம் (மதுவரி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் சின்னத்தம்பி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், கலைராணி, குலேந்திரராஜா (ஜேர்மனி), ரவீந்திரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் R.D.A.), தெய்வேந்திரராஜா (லண்டன்), வரதராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோகரன் (உதவி முகாமையாளர், N.H.D.A), தனேஸ்வரி (விரிவுரையாளர், முகாமைத்துவம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), ரஜனி (ஜேர்மனி), பபி (ஜேர்மனி), நளினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவபாக்கியம், மதுரைமீனாட்சி, குலேந்திரம், காலஞ்சென்ற பரமசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கார்த்திகா, கீர்த்திகா, கீர்த்திகன், புவிராஜ், ரவிராஜ், யதுசங்கித், கஜீவன், திவ்வியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2002) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துன்னாலையில் உள்ள இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.மனோகரன்

"ராணி இல்லம்",
துன்னாலை வடக்கு, கரவெட்டி. (4165)

### திருமதி சின்னாச்சிப்பிள்ளை பழனிவேலு

புங்குடுதீவு, 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பழனிவேலு சின்னாச்சிப்பிள்ளை 23.05.2002 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பழனிவேலுவின் அன்பு மனைவியும் திருமதி கமலா (ஓய்வுபெற்ற ஆசிரியை), மகேஸ்வரன், கணேசன், சுந்தரலிங்கம் (மாவட்ட செயலகம், திருகோணமலை), மகாலிங்கம் (ஜேர்மனி), திருமதி ஜெ.இந்திராணி, திருமதி மா.தெய்வநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சு. நல்லதம்பி மற்றும் பாக்கியலெட்சுமி, தனலெட்சுமி, அருந்தவநிதி, ரதிதேவி, ஆ.ஜெயபாலசிங்கம், தி.மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற அமரசிங்கம் (வட்டக்கச்சி, கிளிநொச்சி), காலஞ்சென்ற கந்தையா (சேமமடு, ஓமந்தை) திருமதி தையமுத்து பொன்னையா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2002) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவென்றான்முனை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப.மகேஸ்வரன் (மகன்)

10 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (4167)

# தடையை நீக்குவதற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தித்துப் பேசினர்.

பேச்சின்போது பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் உடன் இருந்தார்.

கூட்டமைப்பினர் பிரதமரிடம் விடுத்த கோரிக்கைகளும் அவற்றிற்கு பிரதமர் அளித்த பதில்களும் இங்கே தரப்படுகின்றன.

***கோரிக்கைகள்***

1. புரிந்துணர்வு ஒப்பந்தப்படி படையினர் வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள் ஆகியவற்றிலிருந்து இன்னும் வெளியேறவில்லை.

2. மேலும் இழு[illegible]த்துக்கொண்டு இருக்காமல் புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்கவேண்டும்.

3. யுத்தத்தால் சேதமடைந்து போயிருக்கும் வடக்கு - கிழக்குப் பகுதியை மீளக் கட்டியெழுப்பவும் மக்களை மீளக் குடியமர்த்தவும் வசதியாக, பேச்சுக்களை ஆரம்பிக்கும் அதேவேளை இடைக்கால நிர்வாகத்தையும் ஏற்படுத்தவேண்டும்.

4. மீளக்குடியமர்வோருக்கு 39 ஆயிரம் ரூபா மட்டுமே நிவாரணமாக வழங்கப்படுகிறது. இது போதாது. அதிகரிக்கப்படவேண்டும். அவர்களின் நிரந்தர வருமானத்துக்கு வழிசெய்ய வேண்டும்.

5. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யவேண்டும்.

6. தீவுப்பகுதியில் ஆயுதக்குழு ஒன்று கடற்படையினருடன் சேர்ந்து அட்டகாசம் செய்துவருகிறது. அங்கு விடுதலைப் புலிகளை அரசியல் நடவடிக்கையில் ஈடுபடவிடாமல் தடுத்து வருகிறது.

7. திருகோணமலை, முல்லைத்தீவு கடற்பகுதியில் மீனவர்கள்மீது கடற்படையினர் தாக்குதல் நடத்துகிறார்கள்.

8. மாவட்ட அபிவிருத்தி கடந்த அரசின் காலத்தில் யாழ். மாவட்டத்தில் அமைச்சர் ஒருவரால் தவறாகப் பயன்படுத்தப்பட்டது.

9. நேற்று கிழக்கில் திறந்து வைக்கப்பட்ட புதிய முஸ்லிம் பிரதேச சபை தொடர்பாக ஆட்சேபம்.

***பிரதமர் பதில்***

1. படையினர் தங்கியுள்ள இடங்கள் பற்றிய விவரம் கோரப்பட்டிருக்கிறது. கிடைத்ததும் படையினரை விலக்கிக்கொள்ளும் மாற்று ஏற்பாடுகள் பற்றி ஆராயப்படும்.

2. புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சுகளை முன்னெடுப்போம். ஆனால், அதற்கு முன்னர் புலிகளுடன் பேசி சில விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

3. இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

4. மீளக் குடியமர்வோரின் நிவாரணத்தொகைபற்றி புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவுடன் பேசுங்கள்.

5. தடுத்து வைக்கப்பட்டிருப்போர் பற்றிச் சட்டமா அதிபருடன் பேசியுள்ளேன். ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே சாட்சியமாக உள்ளவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்றவர்கள் மீதான விசாரணையைத் துரிதப்படுத்துமாறு உத்தரவிட்டிருக்கிறேன்.

6. தீவுப்பகுதி பற்றி கடற்படையினர் கண்காணிப்புக் குழுவுக்குத் தமது கஷ்டங்களை விளக்கிக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். கண்காணிப்புக் குழு விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கும். பின்னர் விடுதலைப் புலிகளின் [illegible] அறிந்து அதை கடற்படையினருக்கு கண்காணிப்புக்குழு அறிவிக்கும்.

7. கடற்படையினர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி அறிவிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் நிலைமை சீரடையும்.

8. மாவட்ட அபிவிருத்திக் குழுவுக்கு அமைச்சர் அந்தஸ்தில் உள்ளவர் தலைவராக இருக்கவேண்டிய அவசியமில்லை. தலைவர்களாக நியமிக்கப்படவேண்டியவர்களின் பட்டியலை அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா, அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோரிடம் கோரியுள்ளேன். தலைவர்களை நியமிக்கும்போது தமிழ்க் கூட்டமைப்பினரின் ஆலோசனையும் பெறப்படும்.

9. புதிய முஸ்லிம் பிரதேச சபை பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. (ஐ-4)

## நாகவிகாரையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும் வைபவம் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்றது. முன்னதாக தியவதன நிலமேயும் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, கடற்படைகளின் தளபதி பி.என்.அபயசிங்க ஆகியோரும் கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த பௌத்த துறவிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோரும் நகரில் ஆனைப்பந்திப் பகுதியில் இருநது ஊர்வலமாக நாகவிகாரைக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

சிங்கள கலாசார மரபுகளின்படி இந்த ஊர்வலம் அமைந்தது. ஊர்வலத்தில் சிங்கள கலாசார வாத்தியங்கள் இசைக்கப்பட்டன. யானை ஒன்றும் அழைத்துச்செல்லப்பட்டது. முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகளும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

ஊர்வலம் விகாரையைச் சென்றடைந்ததும் அங்கு கலசம் வைக்கும் சடங்கு நடைபெற்றது. தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரத்ன கலசத்தை திரைநீக்கம் செய்தார்.

அங்கு இடம்பெற்ற சமயக்கிரியைகளின் முடிவில் தியவதனநிலமே உரையாற்றினார். பௌத்த தேரர்கள் ஆசியுரை வழங்கினார்கள்.

இந்த வைபவத்தை ஒட்டி நகரப் பகுதியிலும் பலாலி வீதியிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. (ஐ-8-10-ரி)

## ரத்வத்தைக்குப் பிணை

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையை பிணையில் விடுவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தன்னை பிணையில் விடுவிக்குமாறுகோரி அனுருத்த ரத்வத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இம்மனுவை நீதிபதிகளான ராஜா பெர்னாண்டோ, காமினி அமரதுங்க ஆகியோர் விசாரணை செய்தனர்.

ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது வாரத்தில் குற்ற விசாரணை பணியகத்தில் ஆஜராகுமாறும் ரத்வத்தைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அனுருத்த ரத்வத்தையின் கடவுச்சீட்டு தெல்தெனிய நீதிவானிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. (ம)

## 18ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பான்மையினரின் சம்மதத்தைப் பெறவேண்டும் அவர்களின் சம்மதம் இல்லாமல் கலைக்கமுடியாது.

4) நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது மனச்சாட்சிப்படி வாக்களிக்கலாம். அப்படி வாக்களித்துவிட்டும் அவர் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கலாம். அவருடைய அரசியல் கட்சி அவரை விலக்கவோ அல்லது அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவோ முடியாது.

5) கணக்காய்வு கமிஷன் ஒன்றை நியமித்தல்.

6) 1978 இற்கு முன்னர் இயற்றப்பட்ட சட்டங்கள் பற்றி ஆராய்ந்து நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் சிபார்சுகள் செய்வதற்கும் விசேட மன்று ஒன்றை அமைத்தல்.

7) விசேட ஜனாதிபதி கமிஷன்களை ஒழித்தல்.

அரசமைப்பைத் திருத்தாமலும் சில அரசியல் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. (ம)

## வன்னிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழவேண்டும். பேச்சுமூலம் தீர்வு வரும்வரை எமது வலிமை காக்கப்பட வேண்டும். எமது வலிமையின் விளைவே இன்றைய இந்தச் சந்திப்பு.

வன்னி மக்களுக்கான வியாபார மொத்த விற்பனை வரி அடுத்தமாதம் முதல் நீக்கப்படுகிறது. இதனைக் கடைப்பிடித்து வணிகர்கள் மக்களுக்கு நன்மை அளிக்கவேண்டும். வன்னிக்குள் வரும் பொருள்கள் மீதான சுங்கத்தீர்வை ஒரு தொகுதி பொருள்களுக்கு முற்றாகவும் ஒரு தொகுதி பொருள்களுக்கு வெகுவாகவும் குறைக்கப்படுகிறது.

இவற்றின் விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

கடந்த காலப்போரின்போது உழவர்களிடம் இருந்து பெறப்பட்டு இழக்கப்பட்ட 24 உழவு இயந்திரங்களுக்குப் பதிலாக அதன் மொத்தப் பெறுமதியும் அதனுடன் கூடிய பெறுமதியாக 50வீதத் தொகையும் எதிர்வரும் ஜூன் 31ஆம் திகதிக்கு முன்பு உழவர்களுக்கு வழங்கப்படும் - இவ்வாறு தமிழேந்தி தெரிவித்தார்.

நேற்றைய மாநாட்டில் கிளிநொசசி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்கள், அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பிரமுகர் இளம்பரிதி, நிதித்துறைத் துணைப் பொறுப்பாளர் திருக்குமரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)

# மட்டு. மாவட்டம் முற்றாக ஸ்தம்பிதம்; அம்பாறையில் நேற்றும் ஹர்த்தால்

திருக்கோவில் சம்பவத்தை ஆட்சேபித்து நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்திலும் நேற்று ஹர்த்தால் மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.

இதனால் இரண்டு மாவட்டங்களுமே நேற்று பெருமளவில் செயலிழந்தன. வர்த்தக நிலையங்கள், கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. அலுவலகங்கள் இயங்கவில்லை. வாகனப் போக்குவரத்து ஸ்தம்பித்திருந்தது. வீதிகள் வெறிச்சோடின.

திருக்கோயிலில் புலி உறுப்பினர் அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து மாணவர் ஒன்றியம், கிழக்கு பல்கலைக்கழகச் சமூகம் என்பன இணைந்து மட்டக்களப்பு மாவட்ட ஹர்த்தாலை ஒழுங்கு செய்திருந்தன. பல இடங்களில் வீதிகளுக்குக் குறுக்கே கட்டைகள் போடப்பட்டும், டயர்கள் எரிக்கப்பட்டும் போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தது.

ஆரையம்பதி பகுதியில் எரிக்கப்பட்ட டயர்களை படையினர் அகற்றி, பொதுமக்கள் நடமாட்டத்தை ஏற்படுத்தினர். காத்தான்குடி பகுதியிலும் கடைகள், பாடசாலைகள், அலுவலகங்கள், வங்கிகள் மூடப்பட்டிருந்தன.

அம்பாறை மாவட்டத்தில் நேற்றும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சம்மாந்துறையில் பொது ஸ்தாபனங்கள், அரச காரியாலயங்கள், பாடசாலைகள் என்பன மூடப்பட்டிருந்தன. (ம-4)

# ஆசிரியர் போராட்டத்தால் பாடசாலைகள் ஸ்தம்பிதம்

கொழும்பு,மே25

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு - கிழக்கில் ஏற்பாடு செய்த ஒருநாள் சுகவீன லீவுப் போராட்டம் நேற்று வெற்றிகரமாக நடைபெற்றது.

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த ஆயிரத்து 675 தமிழ்மொழிமூல பாடசாலைகளைச் சேர்ந்த 19ஆயிரத்து 823 ஆசிரியர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வன்னிப் பகுதியிலும் பாடசாலைகள் மூடப்பட்டு ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்கவில்லையெனத் தகவல்கள் தெரிவித்தன.

போராட்டம் பூரண வெற்றியளித்தது என்று சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

புலிகள் மீதான தடை நீக்கம், 3 ஆயிரம் ஆசிரியர் நியமனம், சம்பள உயர்வு உட்பட 30 கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் நடத்தப்பட்டது.

பாடசாலை ஆசிரியர்கள் தமது லீவு விண்ணப்பங்களைத் தாம் பணியாற்றும் பாடசாலை அதிபர்களிடமும் அதிபர்கள் தமது லீவு விண்ணப்பங்களைக் கோட்டக் கல்வி அதிகாரிகளிடமும் கொடுத்துவிட்டுத் தமது போராட்டத்தை மேற்கொண்டனர்.

குடாநாட்டிலும் போராட்டம் மிக வெற்றிகரமாக இடம்பெற்றது. பாடசாலைகள் அனைத்தும் ஆசிரியர்கள், மாணவர்கள் வரவின்றி வெறிச்சோடிக காணப்பட்டன.

(ம-4-10-31-117-182-ரி)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர், தமிழழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் மேலும் ஒரு மாதம் தாமதமாகலாம் எனக்கூறி உள்ளார். இது தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

வடபகுதிக்கு விஜயம் செய்த அரச பிரதிநிதிகள் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

அப்போது இரு பக்கங்களிலும் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டன. எந்தவொரு விடயமும் எடுத்த எடுப்பில் நூறுவீதம் சரியாக அமையும் என எதிர்பார்க்கமுடியாது, சுட்டிக்காட்டப்பட்ட முரண்பாடுகள் திருத்திக்கொள்ளக் கூடியவை.

புலிகளும் ஜனநாயக நீரோட்டத்தில் கலக்க விரும்புகின்றனர். எனவே, எதிர்வரும் ஜூன் மாத இறுதி வாரத்தில் முதற்கட்டப் பேச்சுகள் தாய்லாந்தில் ஆரம்பிக்கப்படும் எனப் பேராசிரியர் பீரிஸ் கூறினார். (ம)


**எலைற் கல்வி நிறுவனம்**
192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்.
SPOKEN ENGLISH AND GRAMMAR
**By: Mr. BRITTO**
புதிய பிரிவு
ஆரம்பம்: 27-05-2002
திங்கள் 2 மணி (ப.நே.)
(4115) (Tue., Thu. 2.00 p.m.)

PERSONAL CLASS
Market Lane, Manipay.
**CHEMISTRY**
By: **M.EDWARD B.Sc.**
**A/L 2003**
**Model Paper Class**
ஆரம்பம்:25.05.2002 சனி பி.ப. 5மணி
குறிப்பு:
A/L 2004 வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அனுமதியை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
(4134)

**A/L 2003**
கணக்கீடு :- கம்பனி
ஆரம்பம்:25-5-02 காலை 7.30 மணி
By:-வின்சன்
B.B.A.(H.Rm.SPL.)
இப்பகுதி சனி, ஞாயிறு மட்டும் நடைபெறும்.
(4127)
**ஸ்ரார் கல்வி நிலையம்**
சுன்னாகம்

**கிறிஸ்ரல் சென்ரர்**
நெல்லியடி
SPOKEN ENGLISH AND GRAMMAR
திரு.சடகோபன்
பிரிவு 1 (26)
**O/L DAY CLASS**
பிரிவு 11
ஆரம்பம்: 27.06.2002 பி.ப. 3.00
எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை வகுப்பு ஆரம்பமாகிவிட்டது.
1) நுண் அறிவு
2) மொழி அறிவு
(4154)

**திருமறைக் கலாமன்றம்**
மேற்கொள்ளும்
**'பதிகை'**
பாரம்பரிய நாட்டுக்கூத்து மரபுகளை ஆவணப்படுத்தும் முயற்சியின் முதற் செயற்பாடாக கத்தோலிக்க மரபு நாட்டுக்கூத்தின் பாடல்களை ஒலிப்பதிவு செய்யும் முகமாக, பாடல்களை வகைத்தூய்மையுடன் இனங்காண அண்ணாவிமார்களுடனான சந்திப்பு.
நாள் : இன்று (25.05.2002) சனிக்கிழமை
நேரம்: முற்பகல் 10.00 மணி
இடம்: மன்ற கலைத்தூது மணி மண்டபம்
இக்கூத்து மரபுடன் தொடர்புடைய அண்ணாவிமார்களையும், ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். - திருமறைக் கலாமன்றம்-
(C-222281)

**ENGLISH SPOKEN AND GRAMMAR**
**By: BRITTO**
புதிய பிரிவு (சனி, ஞாயிறு)
காலம் : 26.05.2002
இடம் : கொக்குவில் (ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்)
நேரம் : மாலை 5.00 (ப.நே.)
(C/22241)

**அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய தீர்த்த உற்சவம் (25.05.2002)**
இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு அஷ்டோத்ர சங்காபிஷேகத்துடன் (108) ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து வசந்தமண்டபப் பூஜை நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் எம் பெருமானுக்கு தீர்த்தம் நடைபெற்று 12 மணிக்கு அன்னதானம் இடம்பெறும்.
மாலை 4 மணிக்கு தொடர் தெய்வீக சொற்பொழிவாற்றிய திரு. இரா. செல்வவடிவேல் அவர்களுக்கு ஆலயகுரு சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிப்பார். மாலை 6மணிக்கு கொடியிறக்கம் நடைபெறும். யாவரும் வந்து எம் பெருமானின் அருளினைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.
சந்திரசேகர விநாயகர் ஆலயம்.
உப்புமடம். கோண்டாவில்.
உபயகாரர்: து.இரத்தினசிங்கமும் குடும்பத்தினரும்,
ஆலய தர்மகர்த்தா: ஸ்ரீஸ்கந்தராஜாக் குருக்கள் (J.P.)
(4103)


## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுத்துரை சின்னம்மா

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை சின்னம்மா அவர்கள் நேற்று (24.05.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் சின்னத்தங்கச்சியின் சகோதரியும், பவராணி, நித்தியானந்தன் (சுவிஸ்), மோகனராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், ராசதுரை, நந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், வித்தியாகரன், மயூரதன், அனுசன், ராகவி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2002) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
நித்தியானந்தன் (மகன்)

(C-22290)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.